ஈமானை அரிக்கும்

நோய்கள்

தாருல் ஈமான்

ஈமானை
அரிக்கும் நோய்கள்

தொகுப்பு

உஸ்தாத் சையத் அப்துர் ரஹ்மான் உமரி

தாருல் ஈமான்

70, NP இட்டேரி, போத்தனூர்,

கோயமுத்தூர் - 641 023

This book is not protected by copyright.
Any quotation, reproduction or photocopying is allowed,
as the copyright law is prohibited in Islaam.

ஈமானை அரிக்கும் நோய்கள்!

தொகுப்பு
உஸ்தாத் சையத் அப்துர் ரஹ்மான் உமரி

வெளியீட்டெண்: 03

முதல் பதிப்பு
மார்ச், 2016 ஜுமாதுல் அவ்வல் 1437

ஒளி அச்சு
Darul Eeman, Coimbatore. 8760 84 00 84

வெளியீடு
தாருல் ஈமான் பதிப்பகம், கோயமுத்தூர்.
தொடர்பு: **96774 82422, 98439 11266**

அச்சு: Fortune International, Chennai
syed.fec@gmail.com, Mob: 90032 88402

பக்கங்கள்
48

விலை
Rs 25.00

பொங்கு கருணையாளன், தொடர் கிருபையாளனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்

‘**ஜி**ன்களையும் மனிதர்களையும் எனக்கு இபாதத் செய்வதற்காக அன்றி வேறு எதற்காகவும் நான் படைக்கவில்லை’ (அல்குர்ஆன் 51ஃ56)

இபாதத் என்றால் வணக்கம் என்றோ வழிபாடு என்றோ அல்ல பொருள்!.

அப்த் என்றால் அடிமை. *அப்துல்லாஹ்* என்றால் அல்லாஹ்வின் அடிமை. இபாதத் என்றால் எந்த ஆதிக்கத்திற்கும் கட்டுப் படாமல் இறைவன் ஒருவனுக்கே அடிமையாய் இருப்பது எனப்பொருள். அதாவது அடிமைத்தனம்!. அல்லாஹ்வுக்கு மட்டுமே அடிபட்டுக் கிடக்கின்ற அடிமைத்தனம்!.

இபாதத் என்பதற்கு நாம் என்ன பொருள் கொள்கின்றோமே *ஷிர்க்* என்பதன் பொருளும் அந்த அளவிற்குத்தான் இருக்கும். *இபாதத்* என்பதன் பொருளை ஆழமாக விளங்கிக்கொண்டோமென்றால் *ஷிர்க்* என்பதையும் ஆழமாக நம்மால் விளங்கிக் கொள்ளமுடியும்.

ஈமான் - இறை நம்பிக்கையை சிறுகச் சிறுக அரித்து இல்லாமல் ஆக்கி விடுகின்ற நோய்களைப் பற்றி இந்நூலில் பார்க்கவுள்ளோம். *ஃபிக்ஹு* நூற்களில் *‘ரித்தஹ்’* என்னும் தலைப்பின்கீழ் இவை விரிவாக விளக்கப்படுகின்றன. *ரித்தஹ்* என்றால் *முர்தத்* ஆகி விடுவது, தீனை விட்டு விலகிச் சென்று விடுவது.

நம்பிக்கை என்பது சிந்தனை தொடர்பானது. எனவேதான் *ஈமானை* அரிக்கும் நோய்கள் பெரும்பாலும் சிந்தனையிலேயே மையம் கொள்கின்றன. எடுத்துக்காட்டாக, விபச்சாரம், மது அருந்து தல், திருட்டு, கொலை போன்ற செயல்களை ஒருவன் செய்தால் அவனது *ஈமான்* கறைபட்டு விடுகின்றது. செய்தால் மட்டுமல்ல, இவற்றை செய்யலாம், ஒன்றும் தப்பில்லை என்று ஒருவன் நினைத் தால்கூட - அவன் இவற்றை செய்யாத பட்சத்திலும்- *ஈமானை* இழந்துவிடுகின்றான்.

முதலாம் நோய்:

ஓரிறைவனை விட்டுவிட்டு மற்றவற்றை வழிப்படுவது

தனக்கு இணையாக இன்னொன்றை கருதுவதை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான். அதைத் தவிர மற்ற விஷயங்களில் தான் நாடுபவற்றை அவன் மன்னிப்பான். மேலும் அல்லாஹ்விற்கு இணையாக இன்னொன்றை கருதுபவன் உண்மையில் படுபயங்கர குற்றத்தையே கட்டி முடிக்கின்றான்! (அல்குர்ஆன் 4:48)

எவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கின்றானோ, அவனுக்குத் திண்ணமாக அல்லாஹ் சுவனத்தைத் தடை செய்திருக்கிறான். மேலும், அவனுடைய இருப்பிடம் நரகமாகும். மேலும், இத்தகைய அக்கிரமக்காரர்களுக்கு உதவி செய்வோர் யாருமில்லை. (அல் குர்ஆன் 5:72)

ஷிர்க் - என்பதை தமிழில் இணைவைத்தல் என்று மொழி பெயர்த்து வருகிறோம். இணைவைப்பு என்பதன் விளக்கத்தை புரிந்து கொள் வது நல்லது! இறைவன் அல்லாத இன்னொன்றை இறைவனாக கருதுவது; இறைவனுக்கு மட்டுமே உரித்தான தன்மைகளும், பண்பு களும் இறைவனல்லாத இன்னொன்றிடம் உள்ளதாக நினைப்பது. சுருக்கமாக, இறைவனுக்கு இணையாக இன்னொன்றைக் கருதுவது. இதுவே இணை வைப்பு ஆகும். *ஷிர்க்* என்ற அரபிப் பதத்துக்கு *பங்கிடுதல்* **(Participate)** என்று பொருள். அதன்படி இணைவைப்பு என்றால் *இறைமையைப் பங்கிடுதல்* என்று பொருள்படும்.

ஷிர்க் என்றால் இறைவனல்லாதவற்றை இறைவனாக எண்ணுவது ஆகும்! மற்றெல்லா பெரும்பாவங்கள், கடுந்தீமைகளை விடவும் *ஷிர்க்* தன்னிடம் காணப்படுகின்றது என்று சொல்லப்படுவதை எந்த ஒரு முஸ்லிமும் விரும்பவே மாட்டான். நீ பெரும் பாவம் புரிகிறாய்; மோசமான நடத்தைகளுக்கு சொந்தக்காரனாக இருக்கிறாய்; கேடு கெட்ட பழக்கங்களைக் கொண்டிருக்கிறாய் - என்று என்ன சொன்னா லும் ஒரு பாமர முஸ்லிம் பொறுத்துக் கொள்வான். நீ ஷிர்க் செய்கி றாய் என்று கூறுவதை மட்டும் பொறுத்துக் கொள்ள மாட்டான்; பொங்கி எழுவான்!

குர்ஆன், ஹதீதை ஓரளவுக்கு கற்று உணர்ந்துள்ள மனிதர், *ஷிர்க்* கை இந்தளவுக்கு மக்கள் வெறுத்துப் புறந்தள்ளுவதை அறிந்த

பின்பு, மக்களுடைய செயல்களையும் பழக்க வழக்கங்களையும் உற்று நோக்கிப் பார்ப்பாரேயானால் தாங்க இயலாத அளவு வியப்பு மேலிடும்! ஷிர்க்கைப் பற்றி அவர் விளங்கி வைத்துள்ளதற்கும், மக்களுடைய செயல்களுக்கும் இடையே மாபெரும் முரண்பாடு புலப்படும்! எங்கு பார்த்தாலும், எந்த திசையை நோக்கினாலும் ஷிர்க் எனும் புதைசேறே காணப்படு கின்றது.

ஷிர்க்கைக் குறித்து தான் கருதுவதற்கும், காண்பதற்கும் இடையே இவ்வளவு பெரிய இடைவெளி இருப்பதை அறிந்து அவர் சந்தேகத் தில் ஆழ்ந்து விடுகிறார். ஒரு வேளை ஷிர்க்கைப் பற்றி தான் சரியாக அறிந்து கொள்ளவில்லையோ என்று அவருக்கு தன் மீதே சந்தேகம் ஏற்பட்டு விட்டுகின்றது.

ஓர் அறையில் பயங்கரமான துர்நாற்றம் வீசிக் கொண்டுள்ளது. மூக்கைப் பொத்திக் கொண்டு நீங்கள் உட்கார்ந்துள்ளீர்கள். ஆனால், மற்றவர்களோ வெகு இயல்பாக நடமாடிக் கொண்டும் தங்களுக்குள் பேசிக் கொண்டும் இருக்கிறார்கள். ''ஆஹா! என்ன நறுமணம்!'' என்று வேறு அடிக்கடி கூறிக் கொள்கிறார்கள். ''ஒரு வேளை நம்மு டைய முகரும் திறன் முற்றாக பழுதடைந்து விட்டதா? நறுமணத்தை, துர் நாற்றமென்று முட்டாள்தனமாக நினைத்துக் கொண்டுள்ளேனா?' என்று உங்களுக்கு சந்தேகம் தோன்றி விடுகின்றது. இக்கேள்வியை உங்களுக்குள் மீண்டும் மீண்டும் எழுப்பிக் கொள்கிறீர்கள். நீங்கள் நினைப்பது தான் சரி என்று பட்டவர்த்தனமாக உங்களுக்குப் புரிந்து விடுகின்றது. துர்நாற்றத்தை, நறுமணமென்று ஒப்புக் கொள்வது உங் களால் இயலாத காரியம்!

நீங்கள் இப்போது என்ன செய்வீர்கள்? இரண்டு வழிகள் உள்ளன. (1) ஊரோடு ஒத்துப் போய் மற்றவர்களைப் போன்று நீங்கள் 'ஆமாம், ஆமாம், அழகான நறுமணம்'' என்று ஒத்து ஊதலாம். (2) மற்றவர்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் அக்கறையில்லை, தமக்கு சரியெனப் பட்டதை சொல்லியாக வேண்டும் என்று நினைத் தால் மற்றவர்களைப் பார்த்து 'வேண்டுமென்றே ஏதேனும் உள் நோக்கத்தோடு துர்நாற்றத்தை, நறுமணம் என்று நீங்கள் கூறுகிறீர்கள்; இல்லையென்றால் துர்நாற்றத்துக்கும் நறுமணத்துக்கும் உங்களுக்கு வேறுபாடே தெரிய வில்லை!'' என்று பட்டென்று கூறிவிடுவீர்கள்.

தற்காலத்து முஸ்லிம்களைப் பற்றியும் தங்களைத் தாங்களே

ஓரிறைக் கொள்கையாளர்கள் என்று அழைத்துக் கொள்பவர் களைப் பற்றியும் நான் இவ்வாறே நினைக்கிறேன். முஸ்லிம்களு டைய ஷிர்க் மீதான வெறுப்பும் தவ்ஹீதின் மீதான பற்றும் தெளிந்த அறிவின் அடிப் படையில் இல்லை என்பதே எனது கருத்து! ஷிர்க்கை ஒழிப்பதில் நீண்டதொரு பாரம்பரியத்தை பெற்றிருக்கிறோம். அப்படியிருக்கை யில் அந்தத் தவறை நாமே புரிவோமா? - என்று கற்பனையில் பய ணித்துக் கொண்டுள்ளார்கள்.

ஷிர்க் என்றால் என்ன? அதன் வகைகள், வடிவங்கள் யாவை? நம் முடைய அறிவு, ஒழுக்கம், சமூக, அரசியல் வாழ்க்கையில் அதனால் ஏற்படும் தாக்கங்கள் யாவை? - என்பன பற்றியெல்லாம் இவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்றுதான் சொல்லவேண்டும்! (*அல்லாமா அமீன் அஹ்ஸன் இஸ்லாஹி,* ஓரிறைவனை விட்டு விட்டு வேறினைவனை வணங்குதல்)

என்ன, ஏது? என்று விளங்கிக் கொள்ளாமல் எந்த ஒரு விஷயத் தைப் பற்றியும் நம்மால் ஓர் அபிப்பிராயத்துக்கு வரமுடியாது. ஆகை யால், முதலில் ஷிர்க் என்றால் என்னவென்று விளங்கிக் கொண்ட பிறகு அதன் வகைகள், வகையறாக்களைப் பற்றி பார்ப்போம்.

‘இறைவனுக்கென்றே உள்ள தன்மைகளையோ, இறைவனுக்கு என்றே உள்ள பண்புகளையோ, இறைவனுக்குள்ள உரிமைகளை யோ - இறைவன் அல்லாத இன்னொன்றுக்கு வழங்கினோம் என் றால், அது ஷிர்க்!.’

கொஞ்சம் நிதானமாக இதனைப் புரிந்து கொள்ள முயல வேண் டும். இறைவனுக்கென்றே உள்ள தன்மைகளில் இணைவைப்பது என்றால் என்ன? இறைவன் ஏதேனும் ஒன்றிலிருந்து தோன்றியவன், தோற்ற மூலம் இறைவனுக்கு உண்டு என்று நினைப்பது; இறைவனி லிருந்து இன்னொன்று தோன்றியது என்று எண்ணுவது; ஏதேனும் ஒன்றை/ஒருவரை இறைவனின் பங்காளியாக நினைப்பது; இறைவ னின் மகனாக, தந்தையாக யாரையேனும் உருவகப்படுத்துவது *(இயேசு இறைவனின் மூலத்திலிருந்து உருவானவர்; தேவகுமாரன்; மரியம் இறைவனின் தாய் - என்றெல்லாம் கிறிஸ்துவர்கள் நினைக் கிறார்கள். வானவர்கள் இறைவனின் பெண் மக்கள் என்று அரேபி யர்கள் நினைத்து வந்தார்கள்)* இறைவன் நிரந்தரமானவன்; என்றென்றும் ஜீவித்திருப்பவன்; நிறைவான, பரிபூரண குணங்

களைக் கொண்டவன் என்று அறிவும், மனித இயல்பும், சமய நெறியும் வகைப்படுத்தியுள்ள இறைத் தகுதிகளோடு இவை போன்ற விஷயங்கள் முரண்படுகின்றன.

ஷிர்க் ஃபில் தாத்

இறைத்தன்மைகளில் இணை வைப்பு ***(Shirk Fil Dath)*** என்பது இதுவே ஆகும்! பல்வேறு வடிவங்களில் முன்வைக்கப்படும் *அத்வைதக்* கோட்பாடு இவ்வகையின் பாற்படுகின்றது. அதிலும் குறிப்பாக பகவத் கீதை, இந்துமதத் தத்துவங்களில் கூறப்படும் *அத்வைதம்* முழுக்க, முழுக்க இறைத்தன்மையில் இணைவைப்பே என்பதில் சந்தேகமே இல்லை!

ஷிர்க் ஃபில் ஸிஃபத்

இறைவனுக்கென்றே உள்ள பண்புகளில் இணைவைப்பு என்றால் என்ன?

இறைவனுக்கு மட்டுமே உரித்தான பண்புகளான படைத்தல், நிர்வகித்தல், கட்டுப்படுத்துதல், ஆற்றல், வலிமை, அறிவு, ஞானம் போன்றவை பிறரிடத்திலும் உண்டு என்று எண்ணுவது ***(Shirk Fil Sifath)*** ஆகும். எந்தப் பொருளில் இப்பண்புகள் இறைவனுக்கு வழங்கப்படுகின்றனவோ அப்பொருளில் இவற்றை பிறருக்கு வழங்கக் கூடாது என்பதே நிபந்தனையாகும்! ஏனென்றால், இறைவனுக்கு வழங்காத சாதாரண பொருளில் இவற்றை பிற படைப்பினங்களுக்கும் பயன்படுத்தலாம். இரண்டுக்கும் இடையிலான வேறுபாட்டை நாம் விளங்கி வைத்திருப்பது நலம். இறைவனுக்கு வழங்கப்படும் போது முழுமையான பொருளைத் தரும் இவை மனிதர்களுக்கு வழங்கப்படும் போது தம் பொருளின் ஒரு சில கூறுகளையே வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக *ஹகீம் (நுண்ணறிவாளன்)* என்பதை ஒரு மனிதனுக்கும் கூறலாம்; இறைவனுக்கும் கூறலாம். ஆயின், இறைவனுக்கு மட்டுமேயான பொருளை மனதில் கொண்டு மனிதனுக்காக இதே பண்பைக் கூறினால் அது இறைவனுக்கென்று உள்ள பண்புகளில் இணை வைப்பதாக ஆகிவிடும்!

ஷிர்க் ஃபில் லவாஜிம்

இறைவனுக்குள்ள உரிமைகளில் இணை வைப்பு என்றால் என்ன?

இறைவனின் நிறைவான பண்புகளோடு நீக்கமற நிறைந்துள்ளவை பிரிக்க முடியாது அவற்றோடு இணைந்தவை, அப்பண்புகள் கார ணமாக நம்மீது கடமையாகுபவை - போன்றவற்றில் யாரையே னும் / எவற்றையேனும் இணையாக்குவது (Shrik Fil Lawazim).

உதாரணமாக - இறைவன் படைப்பாளன், முழு உலகையும் அவ னே படைத்துள்ளான். ஆகையால், அவனே உலகை நிர்வகிக்கவும் கட்டுப்படுத்தவும் வேண்டும். உலகின் படைப்பாளனாக இறை வனை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். அதேசமயம் உலகைக் கட்டுப் படுத்தி ஆளும் பொறுப்பு வேறு பலருக்கும் உள்ளதாக நம்புகிறோம் என்றால் இறைவனுக்குள்ள உரிமைகளில் இணைவைக்கிறோம் என்று பொருள். ஏனென்றால், படைக்கும் ஆற்றல் படைத்தவனுக்கு மட்டுமே அடக்கியாளும் உரிமை உண்டு! அந்த உரிமையை பிறருக் கும் நாம் பங்கு போடுகிறோம்.

படைக்கும் ஆற்றலும், கட்டளை பிறப்பிற்கும் அதிகாரமும் அவ னுக்குரியவையே! (அல்குர்ஆன் 7:54)

அகிலமனைத்தும் கட்டுப்படுத்தும் அதிகாரமும் கட்டளை பிறப் பிக்கும் அதிகாரமும் அவனுக்கே உரியது என்றால் அவனுக்கு மட் டுமே கீழ்ப்படிய/வழிபட வேண்டும். வேறு யாருக்கும் கீழ்ப்படியக் கூடாது / வழிபடுகிறோம் என்றால், அவனை நேசிக்காது வேறு யாருக்காவது நமது நேசத்தை உரித்தாக்குகிறோம் என்றால் உரிமையில் இணை வைக்கிறோம் என்றே பொருள்! இதையே வான்மறை குர்ஆன் வேண்டுகின்றது.

நீர் அல்லாஹ்வையே வழிபடும்! கீழ்ப்படிதலை அவனுக்கே உரித் தாக்கிய நிலையில்.. (அல்குர்ஆன் 39:2)

இறைநம்பிக்கை கொண்டவர்களோ அனைவரையும் விட அதிக மாக அல்லாஹ்வை நேசிக்கிறார்கள்! (அல்குர்ஆன் 2:165)

அதாவது இறைவனை நேசிப்பதை விடவும் குறைவாகத்தான் பிறரை நேசிக்கிறார்கள். இறைநேசம் மற்ற அனைத்து நேசங்களை யும் மிகைத்துள்ளது.

இணைவைப்பின் அடிப்படை வகைகள் இவைதாம்! இந்த மூன்று வகைகளில் ஏதேனும் ஒன்றின் கீழ்வரும் இணைவைப்புகள் இன் னும் பல உள்ளன. ஆயினும் அவையனைத்தும் ஷிர்க்கின் வடி

வங்கள் / வெளிப்பாடுகள் /உபகரணங்களாக உள்ளன. அவற்றை அனுமதித்து அப்படியே விட்டு வைத்தால் ஷிர்க் நுழைவதற்குத் தோதாக வாசலை அவை அகலத் திறந்து விடும். தீமைகளை மட்டு மல்லாது தீமைகள் வரும் வழியையும் ஷரீஅத் தடைசெய்கின்றது; குற்றங்களுக்கான காரணங்களையும் அது கட்டுப்படுத்துகின்றது. அவ்வகையில் இத்தகைய ஷிர்க்கின் வெளிப்பாடுகள்/ வடிவங் களையும் ஷரீஅத் தடை செய்துள்ளது. உதாரணமாக இறைவன் அல்லாதவற்றுக்கு முன்னால் *'ஸஜ்தா'* செய்வது (நெடுஞ்சாண்கிடை யாக விழுவது) மாண்பை மனதில் கொண்டு அல்லாஹ் அல்லாதவற் றின் மீது சத்தியம் செய்வது! ஏனென்றால், உச்சகட்ட பணிவின் / தாழ் மையின் அடையாளமாக 'ஸஜ்தா' விளங்குகின்றது. சிலைவணக்கம் செய்யும் மக்கள் சிலைகளுக்கு 'ஸஜ்தா' செய்கிறார்கள். அவ்வாறே சிலைகளின் மீது சத்தியமும் செய்கிறார்கள். ஆகவேதான், வாழ் வியல் நெறியை நிறைவுபடுத்த இறுதியாக வந்த இஸ்லாம் இவ் வனைத்து வடிவங்களையும் / ஷிர்க் வரக்கூடிய வாசல்கள் / தாழ் வாரங்கள் அனைத்தையும் அறைந்து சாத்திவிட்டது.

ஷிர்க் என்பதைப் பற்றி நாம் இன்று என்ன நினைத்துக் கொண்டுள் ளோம்? ஷிர்க் என்றால் சிலை வழிபாடு அல்லது தர்கா வழிபாடு. இவை இரண்டு மட்டும்தானா, ஷிர்க்?

சிலைகள் பிறந்த கதை!

நம்மை எப்படியாவது வழிகெடுக்கவேண்டும், அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாக்கவேண்டும் என்பதுதான் ஷைத்தானுடைய குறிக்கோள். நேராக நம்மிடம் வந்து 'இஸ்லாமைப் பின்பற்றாதீர் கள்! அல்லாஹ்வுடைய அவனது தூதர்களுடைய பேச்சைக் கேட்கா தீர்கள்!' என்று சொல்லமுடியுமா? சொன்னால்தான் நாம் கேட்போமா கேட்க மாட்டோம் அல்லவா? அதற்காக ஷைத்தான் ஒரு திட்டம் தீட்டினான். மனிதர்களிடம் வந்து சுற்றிவளைத்துப் பேசினான்.

மனிதர்களில் சான்றோர்களாக வாழ்ந்த நல்லடியார்கள் இறந்த வுடன், பிற மனிதர்களிடம் வந்து அவர்களைப் பற்றி விசாரித்தான். *'அவர்கள் அனைவரும் இறையடியார்கள். இறைவனுடைய அன் பையும் நெருக்கத்தையும் சம்பாதித்துக் கொண்ட தூயவர்கள்'* என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

‘அப்படியென்றால், நீங்கள் அத்தகைய நல்லவர்களை அடிக்கடி நினைவு கூர்ந்து கொண்டே இருக்க வேண்டும் அல்லவா?’ என்ற கேள்வியை எழுப்பனான்.

‘ஆம், நாங்கள் அடிக்கடி அவர்களை நினைத்துப் பார்த்துக் கொள்கிறோம்’ என்றார்கள் அவர்கள்.

‘உங்களுடைய பிள்ளைகளிடம் அவர்களைப்பற்றி சொல்வது இல்லையா?’ என்று அடுத்த கேள்விக்கு தாவினான்.

‘கண்டிப்பாக சொல்கிறோம். அவர்களைப் பற்றி அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றி எடுத்துக் கூறி அவர்களைப் போன்றே வாழ வேண்டும் என்று போதிக்கிறோம்’ என்றார்கள் மக்கள்.

‘வெறுமனே வார்த்தைகளால் சொல்வதைக் காட்டிலும் அவர்கள் உருவங்களை சித்திரங்களாக தீட்டிவைத்துக் கொண்டு அவற்றை எடுத்துக்காட்டிக் கூறினால் இன்னும் நன்றாக இருக்கும் அல்லவா?’ என்று ஒரு ஆலோசனையை முன் வைத்தான்.

அவனுடைய ஆலோசனையை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். உருவப்படங்களை வரைந்து வைத்துக் கொண்டார்கள். அவற்றைச் சுட்டிக்காட்டி தம்முடைய பிள்ளைகளிடம் அந்த நல்லடியார் களைப் பற்றி கூறத் தொடங்கினார்கள்.

அந்த சித்திர சீலைகள் கொஞ்ச நட்களுக்குள் சாயம் மாறிப் போய் அழியத் தொடங்கின. மறுபடியும் வரைய வேண்டியிருந்தது. இப் படி அடிக்கடி அவற்றை வரையவேண்டிய கட்டாயத்துக்கு மக்கள் தள்ளப்பட்டார்கள்.

‘நான் ஒரு நல்ல ஆலோசனையை தருகிறேன்’ என்று சொல்லி யவாறு ஷைத்தான் மறுபடியும் வந்து சேர்ந்தான். ‘சித்திரங்களுக்கு பதி்லாக நீங்கள் ஏன் சிலைகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது?’ என்று அற்புதமான ஆலோசனையை வழங்கினான். ‘அவை சீக்கிரத் தில் அழியாது. சாயம் போய்விடுமோ என்று கவலைப்பட வேண்டி யதில்லை. சிறிய அளவில் செய்து வீட்டிலேயே வைத்துக்கொள்ள லாம்’ என்று செய்முறையையும் சொல்லித்தந்தான். மதிகெட்ட மக் கள் அவனுடைய பேச்சை நம்பி சிலைகளைச் செய்தார்கள்.

கொஞ்சநாள் கழித்து மறுபடியும் ‘வழிகாட்ட’ வந்தான். ‘வீடுக

ளில் வைப்பதைவிட சிலைகளைக் கொண்டுபோய் வீதிகளில் வைத்தால் இன்னும் சிறப்பு. அடிக்கடி அவற்றைப் பார்க்க முடியும். பார்க்கும் போதெல்லாம் அவர்களுடைய ஞாபகம் நெஞ்சில் நிழலாடும். அவர்களைப் போன்றே மாறவேண்டும் என்ற உத்வேகம் பிறக்கும்' என்றான். அவ்வாறே மக்கள் அவற்றைக் கொண்டுபோய் வீதிகளில் வைத்தார்கள். அந்தச் சிலைகளுக்கு முன்னால் நின்று அவர்களுடைய அருமை பெருமைகளை தம்முடைய குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

அந்த மக்கள் செத்துப்போனதற்குப் பின்னால் அவர்களது மக்கள் அடுத்த தலைமுறையினர் வந்தார்கள். இந்தச்சிலைகள் யாருடைய சிலைகள்? என்பது அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியவில்லை. அவர் களிடம் போய் *'இவர்கள்தாம் உங்களை படைத்து ஆளாக்கி காக்கின்ற கடவுளர்கள்'* என்று ஷைத்தான் கூறினான். அப்படியா? என்று அவர்களும் நம்பி அவர்களை வணங்க ஆரம்பத்தார்கள்.

சிலைகள் பிறந்த கதை இதுதான்! இப்படித்தான் மனிதர்களிடையே சிலைவணக்கம் பரவியது.

நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் காலத்தில் நடந்தது இது. அந்த மக்களை வழிப்படுத்த நூஹ் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அல்லாஹ் தன்னுடைய தூதராக அனுப்பிவைத்தான்.

நம்முடைய நாட்டில் இன்றும் இப்படிப்பட்ட காட்சிகளைப் பார்க்க முடியும். சிலைகளை வணங்காதே என்று சொன்ன பெரியாருக்கும் சிலை உள்ளது. பிறந்த நாள் இறந்த நாளின்போது பூக்களைச் சாற்றி 'அஞ்சலி'யும் செலுத்தப்படுகின்றது.

இஸ்லாமும் ஜாஹிலிய்யத்தும்

மனிதன் உலகத்தில் இரண்டு விதங்களில் வாழலாம். ஒன்று இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழ்வது. அதற்குப் பெயர் *இஸ்லாம்*. இன்னொன்று இறைவனுக்கு கட்டுப்படாமல் தன்னுடைய இஷ்டப்படி வாழ்வது. அதற்குப் பெயர் *ஜாஹிலிய்யத்*.

இறைவனுக்கு கட்டுப்பட்டு வாழ்வதுதான் நேர்வழி. அதன்மூலம் சொர்க்கம் கிடைக்கும். கட்டுப்பட்டு வாழாவிட்டால் வழிகேட்டுப் பாதையில் சென்றால் நரகம் கிடைக்கும்.

நேர்வழிக்கு வாருங்கள் என்றுதான் அனைத்து இறைத்தூதர் களும் அழைத்துள்ளார்கள். அவ்வழியில் போகாதே என்று ஷைத் தான் தடுத்துக் கொண்டே உள்ளான்.

நேர்வழியின் பக்கம் அழைப்பது முஃமின்களுடைய வேலை! அவ்வழியில் இருந்து விலக்குவது ஷைத்தான்களுடைய வேலை!

ஒன்றா இரண்டா, சிலைகள்

மனிதனை நேர்வழியில் செல்லவிடக்கூடாது என்பதுதான் ஷைத் தானுடைய நோக்கம். எப்படியாவது எதையாவது செய்து மனிதர் களை நேர்வழி யிலிருந்து வெளியே இழுத்துவிட வேண்டும் என்று அவன் கடும் முயற்சி செய்கிறான்.

மனிதர்கள் சிலைகளை வணங்குமாறு ஷைத்தான் செய்தான் எனப் பார்த்தோம். குறிப்பட்ட சில சிலைகளையே மக்கள் வணங்க வேண்டும் என்பதெல்லாம் ஷைத்தானுடைய நோக்கம் கிடையாது. மனிதர்கள் அல்லாஹ்வுடைய வழியில் போகக்கூடாது என்பது ஒன்று தான் ஷைத்தானுடைய நோக்கம்.

இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம் காலத்தில் மக்கள் *'நன்னார்'* என்ற சிலையை வணங்கினார்கள். முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்தில் *லாத், உஸ்ஸா, மனாத்* போன்ற சிலைகளை வணங்கினார்கள். இந்தியாவில் சிவ னையும் விஷ்ணுவையும் வணங்கினார்கள். பிறகு காளியை வணங் கினார்கள். அப்புறம் சிவனுக்கு கணேஷ் என்ற மகன் பிறந்தான். அவனை வணங்கினார்கள். தமிழ்நாட்டில் உள்ள சிவனுக்கு முரு கன் என்ற மகனும் பிறந்தான். அவன் பிறந்ததே வடநாட்டில் உள்ள வர்களுக்கு தெரியாது. அவனை வணங்கினார்கள். சிலைகளை வணங்காதீர்கள், அது மூட நம் பிக்கை என்று பெரியார். ஈ.வெ. ராமசாமி பிரச்சாரம் செய்தார். அவருக்கும் மக்கள் சிலை வைத்தார் கள். கொஞ்சநாளில் அவருடைய பிறந்த நாளன்று மாலைகளை சூட்ட தொடங்கினார்கள். இன்னும் கொஞ்ச நாளில் அவரையும் வணங்குவார்கள்.

நேர்வழி எது? வழிகேடு எது? என்பதை முஹம்மது நபி ஸல் லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை வரைபடம் ஒன்றை வரைந்து காட்டி விளக்கினார்கள்.

நேர்க்கோடு ஒன்றை வரைந்தார்கள். அதன் இரண்டு பக்கங்களிலும் சிறுசிறு குறுக்குக் கோடுகளை வரைந்தார்கள். நேர்க்கோடு என்பது நேர்வழி. இறைவனின் பக்கம் கொண்டு போய்ச் சேர்க்கின்ற வழி. குறுக்குக் கோடுகள் அனைத்தும் நேர்வழியை விட்டும் வெளியே இழுக்கின்ற ஷைத்தானுடைய முட்டுச் சந்துகள்.

இறைவனும் இறைத்தூதர்களும் காட்டிய முறைப்படி சற்றும் மாறாமல் அங்கும் இங்கும் விலகிவிடாமல் நேர் இலக்கில் தொடர்ந்து செல்வதுதான் நேர்வழி. இது சொர்க்கத்திற்கு போய்ச் சேருகின்றது. இந்த வழியில் செல்லவிடாமல் தடுப்பதுதான் ஷைத்தானுடைய வேலை. நீங்கள் பயணத்தை ஆரம்பித்த இடத்திலிருந்து உங்களை வழிகெடுக்க அவன் முயற்சிக்கிறான்.

சிலரை ஆரம்ப கட்டத்திலேயே வழிகெடுத்து விடுகிறான். கொஞ்சம் பேரை சற்று தூரம் போகவிட்டு வழிகெடுக்கிறான். இன்னும் கொஞ்சம் பேர் உறுதியோடு பயணத்தைத் தொடருகிறார்கள். ரொம்ப தூரம் போனபிறகு அதையும் இதையும் செய்து அவர்களை வழிகெடுத்துவிடுகிறான். இன்னும் கொஞ்சம் பேரோ கடைசிவரை வெற்றிகரமாக போய்விடுகிறார்கள். எல்லையைத் தொட்டு விடுவார்கள் என்ற நிலைமையில் அவர்களை ஷைத்தான் வென்றுவிடுகின்றான்.

சிலைகளின் நவீன வடிவங்கள்

'அல்லாஹ்வை வணங்காதே! சிலைகளை வணங்கு!' என்று சொன்னபோது அந்தக் கால மக்கள் கேட்டார்கள். அல்லாஹ்வை விட்டுவிட்டு சிலைகளை வணங்கத் தொடங்கினார்கள். இந்தக் காலத்தில் போய் முருகனை வணங்கு, முனியம்மாவை வணங்கு என்று சொன்னால் யாராவது வணங்குவார்களா? கல்லால் ஆன சிலைகளை வணங்குவது எவ்வளவு பெரிய முட்டாள்தனம் என்பதை ஏறக்குறைய எல்லா மக்களும் உணர்ந்து இருக்கிறார்கள். சிலைகளை தெய்வமாக நினைத்து வணங்கி வருகின்ற இந்துக்கள் கூட அவற்றின் மீது நம்பிக்கை வைப்பதில்லை. தங்களுக்கு ஒரு கஷ்டம் வந்துவிட்டால் சிலைகளை கைவிட்டு விடுகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்து மனிதனுடைய அறிவு பல்வேறு விஷயங்களைப் பற்றியும் சிந்திக்கத்

தொடங்கிவிட்டது. காக்கின்ற தெய்வம் முருகன் என்றால் அவன் உலக மக்கள் எல்லோரையும் காக்க வேண்டுமில்லையா? பழனியி லேயே குடியிருந்தால் எப்படி? விஷ்ணு பகவான் அமெரிக்காவில் ஏன் அவதாரம் எடுக்கவில்லை? அங்குள்ள மக்களை எல்லாம் பிரம்மா படைக்கவில்லையா? வேறு ஏதேனும் கடவுள் அவர்களை படைத்திருக்கிறாரா? அப்படி என்றால் அவர் யார்? என்றெல்லாம் இன்றைய இந்துக்கள் யோசிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்களிடம் போய் 'சிலைகளை வணங்குங்கள்!' என்று சொல்ல முடியுமா? முடியாதல்லவா? ஆகையால், காலத் திற்கு ஏற்றமாதிரி ஷைத்தான் வேறு ஒரு புதிய கொள்கை'யைக் கண்டுபடித்தான்.

'உலகத்தையும் உலகத்தில் வசிக்கின்ற ஜீவராசிகளையும் யாருமே படைக்கவில்லை!' என்பதே அந்தக் கொள்கை! கடவுள் மறுப்புக் கொள்கை. சிலைகளை வணங்குவது மடத்தனம், அறியாமை என்று சொன்னவர்களும் அதைத் தீவிரமாக எதிர்த்தவர்களும் கடவுளை மறுத்தார்கள். நிராகரித்தார்கள். *'கடவுளை வணங்குவது காட்டு மிராண்டித்தனம். கடவுளைப் படைத்தவன் அயோக்கியன்'* என் றெல்லாம் பிரச்சாரம் செய்தார்கள்.

'இந்த உலகத்தை யாருமே படைக்கவில்லை. அது தானாகவே தோன்றிவிட்டது. உலகத்தில் உள்ள உயிரினங்களும் ஜீவராசி களும் சுயமாகத் தோன்றி படிப்படியாக வளர்ச்சி பெற்று பரிணா மம் அடைந்து மனிதன் போன்ற உயர்ந்த நிலையை அடைந்துள் ளன. கடவுளை நம்புவது பைத்தியக்காரத்தனம்!'.

நம்பினால் வீட்டோடு வைத்துக் கொள்!

'கடவுள் நம்மைப் படைக்கவில்லை என்றாகிவிட்ட பிறகு, கடவு ளுடைய வேதம், கடவுளுடைய தூதர் என்று சொல்லி பிதற்றிக் கொண்டிருப்பதில் எந்த அர்த்தமும் கிடையாது. நாங்கள் சொல் வதை நீங்கள் நம்பவில்லை என்றால், நீங்கள் வணங்கும் கடவுளை உங்களுடைய வீட்டோடு வைத்துக் கொள்ளுங்கள்! வீதிக்கு கொண்டு வராதீர்கள்! கடவுளுடைய சட்டம், கடவுளுடைய கட்டுப் பாடு என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்!'' என்கிறார் கள். அதாவது, ஷைத்தான் சொல்கிறான்.

விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் கடவுள் மறுப்புக் கொள்கையை வளர்த்தால்தான் இறைவனுடைய வழியில் செல்லா மல் மக்களைத் தடுக்கமுடியும் என்பது ஷைத்தானுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், இந்த இறைமறுப்புக் கொள்கைகளைப் பயன்படுத்தி கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக மக்களை ஆக்கு வதில் அவன் பெருமளவு வெற்றி பெற்றுள்ளான் என்றுதான் சொல்ல வேண்டும்.

அப்படியும் மக்கள் கடவுள் நம்பிக்கையை கைவிடவில்லை என்றால், அதற்கும் ஒரு மாற்று ஏற்பாடு முன்வைக்கப் படுகின்றது. 'கடவுள் நம்பிக்கை என்பது தனிநபர் சார்ந்த விஷயம்! நீங்கள் கடவுளை நம்புகிறீர்கள் என்றால், உங்களது நம்பிக்கையை வீட் டோடு வைத்துக் கொள்ளுங்கள். வீதிக்கு கொண்டு வராதீர்கள். மக் களோடான கூட்டு வாழ்க்கையில் சமூக வாழ்க்கையில் கடவுள் நம் பிக்கை கடைப்படிக்கப்பட வேண்டும் என்று விரும்பாதீர்கள். சமூ கம், அரசியல், பொருளாதாரம், சம்பாதித்தியம், வருமானம், நாட்டு நிர்வாகம் போன்ற வியங்களில் கடவுளுக்கு எள்ளளவும் சம்பந்த மில்லை. இவற்றை எல்லாம் நாமே தீர்மானித்துக் கொள்ளலாம்!' இதுதான் முன்வைக்கப்படும் வாதம்.

இந்த சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு தான் இன்று உல கத்தில் உள்ள எல்லா கொள்கைகளும் உருவாக்கப் பட்டுள்ளன. மக்கள் பெரிதும் போற்றிக் கொண்டாடுகின்ற கொள்கைகளான ஜன நாயகம், தேசிய வாதம், மக்களாட்சி, பொது உடைமை என்று அனைத்து கொள்கைகளுக்கும் இதுவே அடிப்படை!

முஸ்லிம்களுடைய தவறான புரிதல்

முஸ்லிம்களும் இதனை விளங்கிக்கொள்ளாமல் தவறிழைக் கிறார்கள். நாம்தான் சிலைகளை வணங்குவதில்லையே! தர்காக் களுக்கும் போவதில்லையே! 'ஷிர்க்'கை எந்த வகையிலும் செய்வ தில்லையே! என்று முஸ்லிம்கள் தங்களைத் தாங்களே மெச்சிக் கொள்கிறார்கள்.

சிலைகளை கும்பிடாமல் இருந்தாலோ தர்காவுக்கு போகவில்லை என்றாலோ *'ஷிர்க்'* செய்யவில்லை என்றாகிவிடுமா? *'ஷிர்க்'* என் றால் என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ளவேண்டும்.

‘ஷிர்க்’ என்றால் என்ன?

‘ஷிர்க்’ என்றால் அரபி மொழியில் *‘பங்கு’* என்று அர்த்தம். நீங்களும் உங்களுடைய நண்பர்களும் சேர்ந்து ஒரு கம்பெனி ஆரம்பிக்கிறீர்கள். தமிழில் அதை *‘குழுமம்’* என்கிறோம். (குழுவாக ஆரம்பித்துள்ளதால்) அரபியில் அதை *‘ஷிர்க்கா’* என்கிறார்கள். பங்காளியை அதாவது பார்ட்னரை *‘ஷரீக்’* என்கிறார்கள். எல்லோருக்கும் எல்லாமும் சமம் என்று கூறுகின்ற பொது உடைமை (கம்யூனிஸக்) கொள்கையை அரபியில் *‘இஷ்திராகிய்யா’* என்கிறார்கள்.

ஷரீஅத்தில் ‘ஷிர்க்’ என்றால், படைத்த இறைவனோடு இன்னொன்றை இணையாக்குவது என்று பொருள். அதாவது...

1) அல்லாஹ்வை விட்டுவிட்டு இன்னொருவனை இறைவனாக படைத்தவனாக கருதினால் அது ‘ஷிர்க்’

2) நம்முடைய வாழ்க்கைக்கு தேவையான வசதிகளையும் வாழ்வாதாரங்களையும் அல்லாஹ் அல்லாத இன்னொருவன் அளிப்பதாகக் கருதினால் அது ‘ஷிர்க்’

3) நன்மையையும் தீமையையும் தரக்கூடிய சக்தி யாருக்காவது இருப்பதாக நினைத்தால் அது ‘ஷிர்க்’

4) அல்லாஹ் அல்லாத இன்னொரு சக்தி இருப்பதாக நம்பி, அல்லது இன்னொருவருக்கு சக்தி இருப்பதாக நம்பி அவரையோ அதனையோ திருப்திப்படுத்த முயற்சித்தால் அது ‘ஷிர்க்’

5) அல்லாஹ் அல்லாத ஒரு சக்திக்கு முன்னால் தலை வணங்கினாலோ நேர்ச்சை செய்தாலோ துஆ கேட்டாலோ அது ‘ஷிர்க்’

6) அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும் அளவுக்கு சக்தி இருக்கின்றது என்று யாரைப் பற்றியாவது நம்பினால் அது ‘ஷிர்க்’

7) இறந்துபோன அவ்லியாக்கள், நல்லடியார்கள் நமக்காக அல்லாஹ்விடம் வாதாடுவார்கள் என்ற நம்பினால் அது ‘ஷிர்க்’

அதே போன்று,

8) அல்லாஹ்வுக்கு மட்டுமே உரிய ஆற்றலும் வல்லமையும் இன்னொரு பொருளுக்கு இருப்பதாக நினைப்பது ‘ஷிர்க்’

9) அல்லாஹ்வுக்கு மட்டுமே சொந்தமான அதிகாரங்களை இன்

னொரு பொருளுக்கு அளித்தால் அதுவும் 'ஷிர்க்'

10) அல்லாஹ்வுடைய ஆணைகளையும் கட்டளைகளையும் புறந் தள்ளி விட்டு இன்னொரு பொருளுக்கு கட்டுப்பட்டு நடந்தால் அதன் கட்டளைகளுக்கு செவிசாய்த்தால் அதுவும் 'ஷிர்க்'

11) அல்லாஹ்வுடைய கட்டளைகளை இப்போது கடைப்பிடிக்க முடியாது என்று ஒதுக்கிவிட்டு இன்னொரு பொருளின் கட் டளையை கடைப்பிடிக்க முன்வந்தால் அதுவும் 'ஷிர்க்'

12) இறைதூதர் எடுத்துரைத்த இறைவனுடைய சட்ட திட்டங் களை இந்தக் காலத்தில் கடைப்பிடிக்க முடியாது. அவை இந்தக் காலத்துக்கு பொருந்தி வராதவை என்று முடிவு கட்டிவிட்டு வேறு வேறு கொள்கைகளை பின்பற்றினால் அதுவும் 'ஷிர்க்'

முஸ்லிம்களை வழிகெடுப்பது எப்படி?

ஒட்டுமொத்த மக்கள்அனைவரையும் இறைவனுக்கு கட்டுப்படா மல் ஆக்கவேண்டும். இறைவனை ஏற்றுக்கொண்டு அவனது வழி யில் வாழ்கின்ற மக்களையும் வழிகெடுத்து வெளியில் தள்ளவேண் டும் - இதுதானே ஷைத்தானுடைய திட்டம்.

முஸ்லிம்களிடம்போய் சிலைகளை வணங்குங்கள் என்று சொல்ல முடியாது. வேறுவகையில் அவர்களை 'டீல்' பண்ண வேண்டும். ஆகையால், கொஞ்சம் கொஞ்சமாக முஸ்லிம்களிடையே ஷைத் தான் 'தர்கா' வழிபாட்டைப் புகுத்தினான். சிலைகளுடைய இடத் தில் அவ்லியாக்களை வைத்தான்.

சில நாட்களிலேயே தர்கா வழிபாடு கூடாது என்று நல்லடியார் கள், நல்ல முஸ்லிம்கள் பிரச்சாரம் செய்ய ஆரம்பத்து விட்டார்கள். தர்காவுக்கு போவது மிகப்பெரிய தீமை என்பதையும் அதை ஒரு போதும் இஸ்லாம் ஆதரிக்கவில்லை என்பதையும் அந்த இறையடி யார்கள் முஸ்லிம்களுக்கு தெளிவாக உணர்த்தினார்கள். இதனால், பெரும்பாலான முஸ்லிம்கள் தாங்கள் செய்து வந்த தீமையை உணர்ந்து நேர்வழிக்கு திரும்பினார்கள்.

நவீன சிலைகள்

முஸ்லிம்கள் சிலைகளைவும் வணங்குவதில்லை, தர்காக்களுக் கும் போவதில்லை. அவ்வளவுதான் இனிமேல் அவர்களை வழி

கெடுக்கவே முடியாது என்று ஷைத்தான் சோர்ந்து போய் உட் கார்ந்து விட்டானா என்றால் அதுதான் கிடையாது.

நாம் ஏற்கனவே பார்த்தது போல, சிலைகளுடைய பெயர்கள் மாறிக்கொண்டே வந்துள்ளன. சிலைகளுக்கு பதிலாக மக்கள் தர் காக்களுக்கு போய் அவ்லியாக்களிடம் கையேந்த தொடங்கினார் கள். ஏதேனும் ஒருவகையில் அல்லாஹ்வை விட்டும் அவன் பாதையை விட்டும் மக்களை அப்புறப்படுத்தவேண்டும் என்பது தானே ஷைத்தானுடைய நோக்கம்.

தர்காக்களுக்கு போவதை முஸ்லிம்கள் நிறுத்தி விட்டால் ஷைத் தானும் தன்னுடைய முயற்சிகளை நிறுத்திவிடுவானா? அல்லது வேறு ஏதேனும் வழியில் முயற்சி செய்து அல்லாஹ்வுடைய பாதை யில் இருந்து அவர்களை அகற்ற நினைப்பானா? நாம் கொஞ்சம் அக்கறையோடு யோசித்துப் பார்க்கவேண்டும்.

இந்நூற்றாண்டில் கண்டுபடிக்கப்பட்ட மக்களாட்சி, ஜனநாய கம், முதலாளித்துவம் போன்ற கொள்கைகளை முஸ்லிம்களை வழி கெடுப்பதற்காக ஷைத்தான் திறமையாக பயன்படுத்தி வருகிறான். ‘நிலப்பரப்பில் இன்று வணங்கப்படும் சிலைகளிலேயே கேடு கெட்ட சிலை தேசியவாதம்தான்!’ என்று *மகாகவி அல்லாமா இக்பால்* கூறியுள்ளதை நினைவில் கொள்ளவேண்டும்.

வழிபாடு என்றால் என்ன?

‘வழிபாடு’ என்றால் ‘வழியில் செல்வது’ என்று அர்த்தம். ஒரே இறைவன் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டு அவனுடைய வழியில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் ‘இறைவனு டைய வழியில் வாழ்கின்ற முஸ்லிம்கள் நாங்கள்’ என்று நம்மை நாம் சொல்லிக் கொள்ளலாம்.

இறைவனுடைய வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்றால் குடும்பம், தொழுகை, ஜகாத் சொத்து பகிர்மானம் போன்ற நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பான விஷயங்களில் மட்டும் இறைவனுக்கு கட்டுப்பட்டு அவனுடைய வழியில் வாழ்ந் தால் போதுமா?

அல்லது, நம்முடைய கூட்டு வாழ்க்கையிலும் ஒரே இறைவன் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு வாழ வேண்டுமா? என்றொரு

கேள்வி இங்கே எழுகின்றது.

அதாவது, வியாபாரம், பொருளாதாரம், இஸ்லாமிய அழைப் புப் பணி, அரசியல், பண்பாடு போன்ற துறைகளிலும் நாம் அல்லாஹ் வுக்கு கட்டுப்பட வேண்டுமா?

வாழ்க்கையின் எல்லா துறைகளிலும் எனக்கு கட்டுப்படுங்கள் என்று அல்லாஹ் சொல்கிறானா? இல்லை சில காரியங்களை மட் டும் நான் சொன்னபடி செய்துவிட்டு மற்ற விஷயங்களில் உங்க ளுடைய இஷ்டப்படி வாழ்ந்து கொள்ளுங்கள் என்று முழு அனு மதியை அளித்துள்ளானா என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் இறைவனுடைய வழி காட்டுதலின்படியே வாழ்ந்தாக வேண்டும், இறைவன் அதைத்தான் எதிர்பார்க்கிறான் என்றால் அதற்கு வழிகாட்டுகின்ற அதை செயல் படுத்துகிற 'கூட்டமைப்பு' ஒன்று இருந்தாக வேண்டும் அல்லவா?

இறைவனை ஏற்றுக்கொள்ளாத இறைவனே இல்லை என்று நிரா கரிக்கின்ற ஒரு அமைப்பின் கீழாக ஒன்று திரண்டால் ஏக இறை வனான அல்லாஹுக்கு எப்படி கட்டுப்பட்டு வாழ முடியும்?

எவர்கள் நம்பிக்கை கொண்டு, பிறகு தம் நம்பிக்கையை அநீதி யால் மாசுபடுத்தவில்லையோ அவர்களுக்கே உண்மையில் அமைதி உண்டு. மேலும், அவர்களே நேர்வழி அடைந்தவர்கள் ஆவார்கள். (அல்குர்ஆன் 6:82)

இவ்வசனம் அருளப்பட்டவுடன் ஸஹாபாக்கள் கதிகலங்கிப் போனார்கள். அதெப்படி கொஞ்சம்கூட அநியாயம் செய்யாமல் ஒருவர் இருக்கமுடியும்? அண்ணல் நபிகளாரிடம் போய் விளக்கம் கேட்டார்கள். அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் கூறினார்கள், 'அது அல்ல பொருள். லுக்மான் தமது மகனிடம் அளித்த விளக்கம்தான் இதன் பொருள். 'என்னருமை மகனே, ஒரு போதும் ஷிர்க் செய்யாதே. அதுதான் மிகப்பெரிய அநீதியாகும்'. (அஹ்மத், புகாரி, முஸ்லிம்)

'அல்லாஹ்விடம் மிகப்பெரியதாக மதிப்பிடப்படும் குற்றம் எது?' என இறைத்தூதரிடம் கேட்டேன். அதற்கு அண்ணலார், 'அவன் உன்னைப் படைத்திருக்க அவனுக்கு இணையாக இன் னொன்றைக் கருதுவது' என பதில் அளித்தார்கள். (இப்னு மஸ்ஊத்/ புகாரி)

ஏதேனும் ஒரு விதத்தில் அல்லாஹ்விற்கு இணையாக இன்னொன்றை' கருதிவிட்டால் ஷிர்க் செய்துவிட்டால் என்னவாகும்?. *'ஷிர்க் செய்தால் அவர்கள் செய்த அனைத்தும் பாழாகிவிடும்' (அல் குர்ஆன் 6:82)*

'நீ ஷிர்க் செய்தால் உனது செயல்கள் எல்லாம் நாசமாகிவிடும்' (அல்குர்ஆன் 39:65)

இறைவனுக்கு இணையாக இன்னொன்றைக் கருதும் இந்த ஷிர்க் பெரியதும் சிறியதுமாய் இரு வகைப்படுகின்றது.

இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து வெளியேற்றி நரகத்திற்கு உடைமையாளனாக ஆக்கவல்ல செயல்கள் *பெரும் ஷிர்க்* எனப்படுகின்றன. தவ்பா- பாவமன்னிப்பு கோரி மறுபடியும் இஸ்லாமிற்கு மீள்வதுதான் பரிகாரம். மேற்கண்டவை யாவும் இதன்கீழ் வருகின்றன.

இவர்கள், அல்லாஹ்வை விட்டுவிட்டு யாதொரு நஷ்டத்தையும் இலாபத்தையும் தங்களுக்கு அளித்திட இயலாதவற்றுக்கு அடிபணிகின்றார்கள். மேலும், இவை எங்களுக்காக அல்லாஹ்விடம் பரிந்துரைக்கும் என்றும் கூறுகின்றார்கள். (இவர்களிடம்) கேளும்: 'வானங்களிலோ பூமியிலோ அல்லாஹ் அறியாதவற்றை நீங்கள் அவனுக்கு அறிவித்துக் கொடுக்கின்றீர்களா?' இவர்கள் இறைவனுக்கு இணையாகக் கருதுபவற்றை விட்டும் அவன் தூய்மையாளன், உயர்ந்தவன். (அல்குர்ஆன் 10:18)

பெரும் ஷிர்க் நான்கு வகைப்படுகின்றது.

(1) துஆ கேட்பது, கோரிக்கை வைப்பது

இறைவனிடம் கேட்பதைப் போல், இறைவனிடம் யாசிப்பதைப் போல் இறைவன் அல்லாதவற்றிடம் கேட்பது, யாசிப்பது. இன்னல்கள், இடுக்கண்களை அகற்றுவதாக இருந்தாலும் உரிமைகளைக் கேட்பதாக இருந்தாலும் இறைவன் ஒருவனிடம் மட்டுமே கோர வேண்டும்.

இந்த மக்கள் கப்பலில் பயணமாகும்போது தங்களுடைய தீனை மார்க்கத்தை அல்லாஹ்வுக்கு உரித்தாக்கிய வண்ணம் அவனிடம் இறைஞ்சுகின்றார்கள். பறகு, அவன் அவர்களைக் காப்பாற்றிக் கரை சேர்த்துவிட்டால் அவனுக்கு இணைவைக்கத் தொடங்கிவிடு

கின்றார்கள். (அல்குர்ஆன் 29:65)

துஆ என்பது என்ன? கோரிக்கை. இறைவன் அல்லாதவற்றிடம் - அவை உயிரற்றவையாக இருக்கலாம், உயிருள்ள மனிதர்களாக/ அரசுகளாக இருக்கலாம்- நமக்குக் கட்டாயம் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் கேட்கப்படும் கோரிக்கைகள் ஷிர்க்காகும்.

இபாதத் என்றால்தான் என்ன? அல்லாஹ்விற்கு முன்னால் நின்ற வாறு பணிவோடும் பயத்தோடும் பவ்யத்தோடும் தேவைகளை முன்வைத்தால் அது இபாதத்.

ஆக, கோரிக்கைகள் துஆ, இபாதத் என இருவகைப்படுகின்றன. எனவேதான் துஆ, மிகச்சிறந்த இபாதத்தாக திகழுகின்றது. இறை வனின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகின்றது.

மேலும் எனது அடிமைகள் என்னைக் குறித்து உம்மிடம் கேட்பார் களானால், ''நிச்சயமாக நான் (அவர்களுக்கு) அருகிலேயே இருக் கிறேன்; என்னை எவரேனும் அழைத்தால் அவ்வாறு அழைப்ப வனுடைய அழைப்புக்கு மறுமொழி சொல்கிறேன்''. (2:186)

உங்கள் இறைவன் கூறுகிறான்: ''என்னிடம் இறைஞ்சுங்கள்! நான் உங்கள் இறைஞ்சுதலை ஏற்றுக் கொள்வேன். திண்ணமாக, எவர்கள் தற்பெருமை கொண்டு எனக்கு வழிபட மறுக்கின்றார்களோ அவர் கள் இழிவுக்கும் கேவலத்துக்கும் ஆளாகி அவசியம் நரகில் நுழை வார்கள். (அல்குர்ஆன் 40:60)

(2) எண்ணம் மற்றும் நோக்கத்தில் ஷிர்க்

இறைவனல்லாத இன்னொன்றுக்காக ஏதேனும் ஒன்றைச் செய் வது.

எவர்கள் இவ்வுலக வாழ்வையும், அதன் அலங்காரத்தையும் நாடுகின்றார்களோ அவர்களுக்கு, அவர்களின் செயல்களுக்கேற்ற கூலியை இங்கே நாம் அளித்து விடுகிறோம்; அதில் அவர்களுக்கு எவ்விதக் குறைபாடும் செய்யப்படமாட்டாது. ஆனால் இத்தகை யோருக்கு மறுமையில் நரக நெருப்பைத் தவிர வேறு ஒன்றும் இருக் காது. மேலும், அவர்கள் இவ்வுலகில் உருவாக்கியவை அனைத் தும் அடியோடு அழிந்துபோய்விட்டன! அவர்கள் செய்து வந்தவை யாவும் வீணானவை! (அல்குர்ஆன் 11:15, 16)

அவர்களுடைய செயல்கள் அழிந்து நாசமானதற்கு என்னதான் காரணம்? ஷிர்க்கும் குஃப்ரும்தான் காரணம் என்கின்றது குர்ஆன். அவர்களுடைய நோக்கம், திட்டமிடல், செயல்பாடுகள் அனைத்தும் இந்த உலகத்தைச் சுற்றியே இருந்தன. அதற்கு அப்பால் அவர்களுடைய நோக்கமோ பார்வையோ போகவேயில்லை. விளைவு அல்லாஹ்விடத்தில் அவர்களின் செயல்கள் யாவும் அழிந்துவிட்டன, நரகம்தான் கிடைத்தது அவர்களுக்கு மறுமையில்.

(3) கீழ்ப்படிதலும் கட்டுப்படுதலும்

சட்டங்களையும் சாசனத்தையும் இயற்றுவதில் அல்லாஹ்வையும் அல்லாஹ் அல்லாதவற்றையும் ஒன்றாக ஒரே தட்டில் வைப்பது.

ஆட்சி செலுத்தும் அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருக்கும் இல்லை. அவனைத் தவிர வேறு யாருக்கும் நீங்கள் அடிபணியக்கூடாதென்று அவன் கட்டளையிட்டுள்ளான். இது தான் முற்றிலும் நேரான வாழ்க்கை நெறி! (அல்குர்ஆன் 12:40)

அல்லாஹ் அனுமதி அளிக்காத தீனின் தன்மை கொண்ட ஒரு வழிமுறையை வகுத்துக் கொடுக்கின்ற இணைக்கடவுள்கள் இவர்களுக்கு இருக்கின்றனவா! (அல்குர்ஆன் 42:21)

தீர்ப்பளிக்கும் அதிகாரத்தை, சட்டமியற்றும் அதிகாரத்தை இறைவன் அல்லாத வேறுயாருக்காவது அளித்தால் *-அவர்கள் ஆட்சியாளர்களாக இருக்கலாம், மார்க்க அறிஞர்களாக இருக்கலாம்-* இறைவனுடைய உரிமையை பறித்து விட்டதாகத்தான் பொருள், ஷிர்க் செய்துவிட்டதாகத் தான் பொருள்.

அவர்கள் அல்லாஹ்வை விடுத்து மார்க்கமேதைகளையும் துறவிகளையும் தங்களின் றப் கடவுளராக்கிக் கொண்டார்கள். மேலும் மர்யத்தின் குமாரர் மஸீஹையும் (இறைவனாக்கிக் கொண்டனர்). உண்மை யாதெனில், ஒரே இறைவனைத் தவிர வேறெவரையும் வணங்க அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டதில்லை. வணக்கத்திற்குரிய இறைவன் அவனையன்றி யாரும் இல்லை. அவர்கள் செய்யும் இணை வைப்புச் செயல்களிலிருந்து அவன் தூய்மையானவன். (அல்குர்ஆன் 9:31)

இவ்வசனம் அருளப்பட்டபோது கிறித்துவராக இருந்து முஸ்லிமாக மாறியிருந்த *அதீ இப்னு ஹாதிம்* என்னும் நபித்தோழர்

‘இறைவனின் தூதரே நாங்கள் ஒருபோதும் எங்கள் மதகுருமார்களை தெய்வங்களாக எண்ணியதே கிடையாதே?’ என கேள்வி தொடுத்தார். அதற்கு அண்ணலார், ‘அவர்கள் ஹலாலாக்கியவற்றை ஹலாலாகவும் ஹறாமாக்கியவற்றை ஹறாமாகவும் கருதிப் பின்பற்றினீர்கள்தானே?’ என விசாரித்தார்கள். ஆம் என்றார் அவர். ‘அப்படி என்றால் அவர்களை கடவுளர்களாக ஆக்கிக் கொண்டதாகத்தான் பொருள்’ என்றார்கள் அண்ணலார். (திர்மிதீ, ஹஸன் என்கிறார் அல்பானி)

இறைகட்டளைகளுக்கு மாற்றமான விஷயங்களில் யாருக்கேனும் கட்டுப்பட்டால் அவர்களை கடவுளர்களாக ஆக்கிக் கொண்டதாகப் பொருள் என்கிறார் இதற்கு விளக்கம் அளிக்க வரும் அபுல் புஃக்தரீ (ரஹ்).

இவர்களைப் பார்க்கவில்லையா? ‘உமக்கு அருளப்பட்ட வேதத்தையும் உமக்கு முன்னால் அருளப்பட்ட வேதங்களையும் நாங்கள் நம்பினோம்’ என்கின்றார்கள். எனினும், அவர்கள் தீர்ப்புக்காக தம் விவகாரங்களை தாஃகூத்திடம் கொண்டு செல்லவே விரும்புகின்றார்கள். ஆயினும் தாஃகூத்தை நிராகரிக்குமாறுதான் அவர்கள் கட்டளையிடப் பட்டிருந்தார்கள். ஷைத்தான் அவர்களை முற்றிலும் வழிகெடுத்து வெகுதூரம் கொண்டு செல்ல விரும்புகின்றான். (அல் குர்ஆன் 4:60)

கவனியுங்கள். தன் தூதருக்கு தான் அருளாத அனைத்து சட்டங்களையும் *‘தாகூத்’* என்கிறான் இறைவன்.

இறைவன் ஹலாலாக்கியவற்றை ஹறாமாக்குபவர்களையும் இறைவன் ஹறாமாக்கியவற்றை ஹலாலாக்குபவர்களையும் பின்பற்றுபவர்களும் கீழ்ப்படிபவர்களும் இரு நிலைகளில் உள்ளனர்.

(அ) இறைவனும் இறைத்தூதருக்கும் கட்டளையிட்டுள்ளதற்கு மாற்றமாக தமது தலைவர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளதை அவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இது குஃப்ராகும். இஸ்லாமிய சன்மார்க்கத்தை விட்டு அவர்களை வெளித் தள்ளிவிடும் அப்பட்டமான நிராகரிப்பு.

(ஆ) இறைவன் இவ்வாறே கட்டளையிட்டுள்ளான் என்றோ இறைவன் இவ்வாறு செயல்பட அனுமதித்துள்ளான் என்றோ நம்பி

தங்கள் தலைவர்களின் சொல்பேச்சுக்கு முற்றிலுமாகக் கட்டுப்படுவது. உண்மையில் அவர்கள் இறைவனுக்கு எதிராகவும் இறை கட்டளைகளுக்கு மாற்றமாகவும்தான் கட்டுப்பட்டு வருகின்றார்கள். மது அருந்துவது, வட்டி வாங்குவது, வட்டி கட்டுவது போன்ற பற்பல செயல்களை இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் இவ்வாறு எண்ணியே செய்து வருகின்றார்கள்.

இந்த 'கீழ்ப்படிதலில் ஷிர்க்'கை அறிஞர்கள் உலமாக்கள் செய்யும் போது அவர்களது அறிவும் கல்வியும் பயனற்றுப் போய் விடுகின்றது. அல்லாஹ் ஹறாமாக்கியவற்றை ஆட்சியாளர்கள் ஹலாலாக்குகின்றார்கள், ஹலாலாக்கியவற்றை ஹறாமாக்குகின்றார்கள் என்று தெரிந்துகொண்டே உலகியல் ஆதாயங்களை கருத்தில்கொண்டு பின்பற்றுகின்றார்கள்.

இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்) சொல்வதைக் கேளுங்கள், 'அல்லாஹ்வின் வேதத்தையும் இறைத்தூதரின் ஸுன்னாவையும் கற்றறிந்த ஓர் அறிஞர், இறை கட்டளைகளுக்கும் இறைத்தூதரின் நெறிமுறைக்கும் எதிரானவை என்றிருந்தபோதிலும் ஆட்சியாளர்களுக்குக் கட்டுப்படுகின்ற போது *முர்தத்* ஆகிவிடுகின்றார். உலகத்திலும் மறுமையிலும் தண்டனைக்கு உரியவராகி விடுகின்றார். ஏனெனில்,

'அலிஃப், லாம், மீம், ஸாத். இது உம்மீது இறக்கியருளப்பட்டிருக்கும் வேதமாகும். எனவே, இதனைப் பற்றி உமது உள்ளத்தில் எவ்விதத் தயக்கமும் ஏற்பட வேண்டாம். (சத்தியத்தை மறுப்போர்க்கு) இதன் மூலம் நீர் எச்சரிக்கை செய்ய வேண்டும். மேலும், இறை நம்பிக்கை கொண்டோர்க்கு இது ஓர் அறிவுரையாகத் திகழ வேண்டும் என்பதற்காகவே இது இறக்கி வைக்கப்பட்டது. (மக்களே!) உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு இறக்கி வைக்கப்பட்டவற்றைப் பின்பற்றுங்கள்! மேலும், அவனை விடுத்து வேறு பாதுகாவலர்களைப் பின்பற்றாதீர்கள்! ஆனால் நீங்கள் மிகக் குறைவாகவே நல்லுரைகளை ஏற்கின்றீர்கள்'. (அல்குர்ஆன் 7:1-3)

இறைவனைப் பற்றியும் இறைத்தூதரைப் பற்றியும் அவர் கற்றதை கைவிட்டுவிட வேண்டும் என துன்புறுத்தப்பட்டால்/ வதைகளுக்கு ஆளாக்கப்பட்டால் அப்போதும் இறைதண்டனைக்கு அவர் உரியவராகி விடுவார். அவற்றை எதிர்கொண்டு தான் கற்றதில் அவர்,

உறுதியாக நிற்றிருத்தல் வேண்டும். ஏனெனில், பணியை நிறைவேற்றுங்கால் இன்னல்களுக்கும் இடுக்கண்களுக்கும் ஆளாவதென்பது இறைத்தூதர்களின் வழிமுறை.

'அலிஃப், லாம், மீம். 'நாங்கள் நம்பிக்கை கொண்டோம்' என்று மட்டும் கூறுவதனால் விட்டுவிடப்படுவார்கள்; மேலும், அவர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட மாட்டார்கள் என்று மக்கள் எண்ணிக் கொண்டார்களா, என்ன? உண்மையில், இவர்களுக்கு முன் வாழ்ந்தவர்கள் அனைவரையும் நாம் சோதித்திருக்கிறோம். அல்லாஹ் அவசியம் கண்டறிய வேண்டியுள்ளது; உண்மையாளர்கள் யார்? பொய்யர்கள் யார் என்பதை! (அல்குர்ஆன் 29:1-3)

(4) நேசங்கொள்வதில் ஷிர்க்

அல்லாஹ்வை நேசிப்பதைப் போன்றோ அதைக்காட்டிலும் அதிகமாகவோ அல்லாஹ் அல்லாதவற்றை நேசிப்பது இவ் வகையிற் சேரும். *'அல்லாஹ்வை எவ்வாறு நேசிக்க வேண் டுமோ அதுபோல அவர்களை நேசிக்கிறார்கள். ஆனால் இறை நம்பிக்கை கொண்டவர்களோ அல்லாஹ்வை அனைவரையும் விட அதிகமாக நேசிக்கிறார்கள்'. (அல்குர்ஆன் 2:165)*

அல்லாஹ்வை நேசிப்பதைப் போன்று இன்னொருவரை நேசிப்பவர்கள் அவரை அல்லாஹ்விற்கு நிகராக ஆக்கிவிடுகின்றார்கள். ஆனால், ஈமான் கொண்ட இறைநம்பிக்கையாளர்கள் அப்படிச் செய்வதில்லை. மற்றெல்லாவற்றையும் விட அல்லாஹ்வைத்தான் அவர்கள் அதிகமாக நேசிக்கின்றார்கள்.

அல்லாஹ்வை என்ன, அல்லாஹ்வின் தூதரை விட வேறு எதையாவது அதிகம் நேசித்தாலும் இதே நிலைதான். *'உங்களில் ஒருவரின் பிள்ளைகளை விட, பெற்றோர்களை விட, உலக மக்கள் யாவரையும் விட அவரிடம் அதிக நேசத்திற்கு உரியவனாக நான் ஆகும் வரை அவர் ஈமான் கொண்டவராக (நம்பிக்கையாளராக) ஆகவே மாட்டார்' (அஹ்மத், புகாரி, முஸ்லிம்)*

விருப்பும் வெறுப்பும் இறைவனைப் பின்தொடர்ந்து வந்தாக வேண்டும். அவன் நேசிப்பதை நாம் நேசித்தாக வேண்டும், அவன் வெறுப்பதை நாம் வெறுத்தாக வேண்டும்.

ஒரு *முஷ்ரிக்* என்ன செய்கின்றான்? தனது தெய்வங்களை -

சிலைகளோ மரமோ அக்னியோ மலையோ தர்காவோ - நேசிக்கின்றான். அவை தரக்குறைவுக்கு ஆளானாலோ இழிவாக்கப்பட்டாலோ கடுமையாக சினம் கொள்கின்றான். இறைவனுக்காக சினம் கொள்வதைக் காட்டிலும் அதிகமாக!. அல்லாஹ்வின் விஷயத்தில் சந்தோஷப்படுவதைக் காட்டிலும் அதிகமாக அவற்றின் விஷயத்தில் சந்தோஷப்படுகின்றான். இறைவனை விட அதிகமாக நேசிப்பது என்பது இதுதான்!.

நேசம் என்றால் நேசிக்கப்படுபவனுக்கு எதிரானவற்றை பிடிக்காதவற்றை விட்டுவிட வேண்டும். இதுதான் நேசத்தின் இலக்கணம்!. *'(நபியே! மக்களிடம்) நீர் கூறுவீராக: 'நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாய் இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள்; அல்லாஹ் உங்களை நேசிப்பான். மேலும் உங்களுடைய பாவங்களையும் மன்னிப்பான்'. (அல்குர்ஆன் 3:31)*

இந்த நேசம் நான்கு வகைப்படுகின்றது என்கிறார் *இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்).* அவற்றை பிரித்து பிரித்து அறிந்து கொள்ள வேண்டும். அவற்றை இனம்பிரித்து அறியாதவன் வழிகேட்டில் சிக்கிகொள்ள நேரிடும்.

(அ) இறைவனை - ஆண்டவனை நேசிப்பது. தண்டனையிலிருந்து தப்பி வெற்றி பெற இது போதுமானதாக இல்லை. ஏனெனில் சிலையைக் கும்பிடும் முஷ்ரிக்கீன்களும் சிலுவையைக் கும்பிடும் கிறித்துவர்களும் யூதர்களும் கூட ஆண்டவனை நேசிக்கத்தான் செய்கின்றார்கள்.

(ஆ) இறைவனுக்குப் பிரியமானவற்றை நேசிப்பது. நிராகரிப்பில் இருந்து வெளியேற்றி கீழ்ப்படிதல் எனப்படும் இஸ்லாமில் நுழையச் செய்வது இதுவே. இந்த நேசத்தில் பற்றோடும் பிடிப்போடும் இருப்போர்தாம் மக்களிலேயே அல்லாஹ்விடம் அதிக அன்பிற்கு உரியோர்.

(இ) அல்லாஹ்விற்காக, அல்லாஹ்வின் விஷயத்தில் நேசிப்பது. இறைவனுக்காக நேசிப்பது என்பதோடு பிணைந்துள்ள அம்சம் இது. இறைவனுக்குப் பிரியமான பொருளை நேசிப்பதாக இருந்தால் அது, இறைவனுக்காக இறைவன் விஷயத்தில் அமைந்தாக வேண்டும். உள்ளிலும் புறத்திலும் அதனை நேசிக்க இறைவனே

உண்மையான காரணமாக இருக்கவேண்டும்.

(ஈ) இறைவனோடு சேர்த்து இன்னொன்றையும் நேசிப்பது. இது தான் ஷிர்க்கான நேசம். இறைவனுக்காகவோ இறைவன் சொன்ன தற்காகவோ நேசிக்காமல் இறைவனோடு சேர்த்து நேசிப்பது. இத னால் அது, இறைவனுக்கு 'நிகர்' ஆகிவிடுகின்றது. முஷ்ரிக்குகள் 'முஷ்ரிக்குகளாக' ஆகிவிடுவதற்கு இதுதான் காரணம். (அல் ஜவா புல் காஃபி)

இறைவன் விஷயத்தில் ஒன்றை நேசிப்பதற்கும் இறைவனோடு சேர்த்து ஒன்றை நேசிப்பதற்கும் என்ன வேறுபாடு? இமாம் இப்னுல் கய்யிம் விளக்குவதைக் கேட்போம். 'இறைவனுக்காக ஒன்றை நேசிப்பது இறை நம்பிக்கை -ஈமானை நிறைவாக்குகின்றது. இறை வனோடு சேர்த்து ஒன்றை நேசிப்பதுதான் உண்மையில் ஷிர்க்காக இருக்கின்றது'. (கிதாபுர் றூஹ்)

இறைவன் அல்லாதவற்றிற்காக உயிர்ப்பலி கொடுப்பது

பெரும்பாவங்களில் ஒன்றாம் இது. உயிர்ப்பலியும் குர்பானியும் சிறந்த இறை வழிபாடுகள். இவற்றை எந்தவிதக் கலப்பும் பங்கீடும் (ஷிர்க்கும்) இல்லாமல் இறைவன் ஒருவனுக்கென்றே நிறைவேற்று வது கடமையாம். *'உங்கள் இறைவனுக்காக தொழுது பலியும் கொடுப்பீராக' (அல்குர்ஆன் 108:2)*

கூறுவீராக: *'நிச்சயமாக, எனது தொழுகையும் எனது பலியிடலும் எனது வாழ்வும் எனது மரணமும் அகிலங்களின் அதிபதியான அல்லாஹ்வுக்கே உரியனவாகும்'. (அல்குர் ஆன் 6:162)*

கல்லுக்கோ சிலைக்கோ மரத்திற்கோ மண்ணறையில் அடங்கி உள்ளவருக்கோ - யாருக்காக அறுத்துப் பலியிடப் பட்டாலும் - பலி கொடுப்பவர் முஸ்லிமோ யூதரோ கிறித்துவரோ சிலை வணங் கியோ - அது ஷிர்க்காகும். அவர் முஸ்லிமாக இருந்தால் *முர்த்தத்* ஆகிவிடுகின்றார்.

இவ்வகையான ஷிர்க்குகள் இன்னும் நிறைய உள்ளன. அல்லாஹ் அல்லாதவற்றிடம் உதவி கோருதலும் அவற்றுள் அடக்கம்.

இரண்டாவது: சிறுவகை ஷிர்க்

இவை பெரும் ஷிர்க்கைப் போன்றவை அல்ல. ஆயினும் இவை ஓரிறைக் கோட்பாட்டிற்கு ஊறு விளைவிக்கின்றன. பெரும் ஷிர்க்கை நோக்கி அழைத்துச் செல்கின்றன.

'ஷிர்க்கை இறைவன் மன்னிக்கவே மாட்டான் என்பது தெளிவு சிறுவகை ஷிர்க்கைச் செய்தவன் முஸ்லிமாக நிலையில் மரணம் அடைந்தாலும் அவனது இந்த ஷிர்க் மன்னிக்கப்படாது. அதற்கு ரிய தண்டனையை அவன் பெற்றே தீருவான்' - இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்).

'நிரந்தர நரகம் என்பது அவனுக்கில்லை. செய்த ஷிர்க்கிற்கு உரிய தண்டனையை அனுபவித்த பிறகு சொர்க்கத்திற்கு அனுப்பப்பட்டு விடுவான்' என்கின்றனர் உலமாப் பெருமக்கள்.

இங்கே இன்னொன்றையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும். மறுமையில் நன்மைகளையும் தீமைகளையும் எடைபோடப்படும் எனச் சொல்லப் படுகின்றதல்லவா? அதில் பெரும் ஷிர்க் சேராது. ஏனெனில் ஒருவன் பெரும் ஷிர்க்கில் ஈடுபட்ட பிறகு அவனது எந்த நற்செயல்களுக்கும் மதிப்பு இருப்பதில்லை.

எவை எவை சிறுவகை ஷிர்க் என்பதை பலவகைகளில் விளங்கிக் கொள்ளலாம்.

'சிறுவகை ஷிர்க் விஷயத்தில்தான் நான் மிகவும் பயப்படு கிறேன்' என்றார்கள் அண்ணலார். அதென்ன சிறுவகை ஷிர்க் என்றபோது 'ரியா - தற்பெருமை' என்றார்கள். (அஹ்மத்)

இவை போன்ற பிற அறிவிப்புகள்.

'அம்பெறி யூகவாக்கு ஷிர்க்காகும்' என்பன போன்ற நபி மொழி கள்.

சிறுவகை ஷிர்க் குறித்து நபித்தோழர்களின் கருத்துகள்.

சிறுவகை ஷிர்க் இருவகைப்படுகின்றது.

- **(அ) வெளிப்படு வகை:**

சொல்லாலும் செயல்களாலும் வெளிப்படுவது.

இறைவன் அல்லாதவற்றின் மீது சத்தியம் செய்வது, இறைவனும் நீங்களும் நாடினால் என்பன போன்ற வார்த்தைகளைப் பயன் படுத்துவது.

துன்பங்களும் இன்னல்களும் நீங்கவேண்டும் என்பதற்காக தகடு கள், தாயத்துகள் கட்டிக்கொள்வது, கண்ணேறு அகல கயிறுகளை அணிவது - இவை போன்றன செயல்களால் வெளிப்படும் ஷிர்க் காகும்.

(ஆ) மறைவான ஷிர்க்

பெருமைக்காகவும் புகழுக்காகவும் நற்செயல்களை, வழிபாடு களைச் செய்வது. மற்றவர்களுக்காக தொழுவது, திலாவத் செய்வது போன்றவை.

‘மற்றவர்களுடைய பார்வைக்காக தொழுபவன் ஷிர்க் செய்து விட்டான், மற்றவர்களுடைய பார்வைக்காக நோன்பு நோற்றவன் ஷிர்க் செய்து விட்டான், மற்றவர்களுடைய பார்வைக்காக ஸதக்கா செய்தவன் ஷிர்க் செய்துவிட்டான்’ (அஹ்மத்)

‘கரையே இல்லாத கடல்போன்றது இத்துறை. இறைவனை மன தில் கொள்ளாமல் வேறு யாரை நினைத்து - அவனது நெருக் கத்தைப் பெற வேண்டும் என்பதற்கோ அவனிடமிருந்து ஆதாயம் அடையவேண்டும் என்பதற்கோ- எச்செயலை செய்தாலும் அது எண்ணத்திலும் நோக்கத்திலும் ஷிர்க் செய்ததாக ஆகிவிடும்’ என் கிறார் *இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்).*

இதற்காகத்தான் *‘மெய்யுணர் திறனருட்பார்வை’* கொண்டோர் அடிக்கடி தமது உள்ளத்தை கடும் விமர்சனத்திற்குள்ளாக்கினர். மனோ இச்சைகளின் நிமிட நேரமும் கழிந்துவிடக்கூடாதே என் பதில் படு எச்சரிக்கையோடு இருந்தனர்.

இது மிகவும் நுட்பமான துறையாகும். ஷைத்தானுக்கு இங்கு தான் வலைவீசி விளையாட பெருவாய்ப்பு இருக்கின்றது. திகட்டத் திகட்ட சளைக்காமல் கொண்டாட்டமாய் கொட்டமடிக்கின்றான் அவன்.

உலகப்பற்று அற்றோர், மறுமை ஆசையொன்றையே மனதில் குடி வைத்தோர் கூட ஷைத்தானிடமிருந்து தப்ப முடியாமற் போய்

விடுகின்றது. மக்களுடைய புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் காது கொடுக்காதவர்கள், பெருமைக்கும் புகழுக்கும் பயந்து வழிபாடு களை மறைத்தவர்கள் கூட மறுமையில் ஒன்றும் பெற முடியாமல் 'நஷ்டவாளிகளாக' ஆகிப்போய் விடுகின்றார்கள்.

(1) இறைவனுக்காக அன்றி மக்களுக்காக வழிபடுவது.

'ஒருவன் தொழுகின்றான். மக்கள் பார்வை பட்டவுடன் தனது தொழுகையை அழகாக்கிக் கொள்கின்றான் என்றால் அவன் படைத்த இறைவனை பரிகசிக்கின்றான்' என்கிறார்கள் அண்ண லார் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்.

'இந்நயவஞ்சகர்கள் மக்களுக்குக் காட்டிக் கொள்ளவே தொழு கிறார்கள். இன்னும், அல்லாஹ்வை மிகக் குறைவாகவே நினைவு கூருகிறார்கள்'. (அல்குர்ஆன் 4:142)

(2) இறைவனுக்காக ஒரு செயலைச் செய்தபோதிலும் அதில் மற்றவர்களையும் இணைத்துக் கொள்வது. அதனைக் கெடுத்து நாசமாக்க இதுவே போதும்.

'பங்காளிகளும் பங்கும் எனக்கு தேவையே கிடையாது. ஒருவன் ஒரு செயலைச் செய்கின்றான். அதில் என்னோடு இன்னொன்றுக்கும் பங்கு வைக்கின்றான் என்றால் அச்செயலையும் விட்டு விடுகிறேன், அப்பங்கையும் விட்டுவிடுகிறேன்' என இறைவன் கூறுகிறான். (ஸஹீஹ் முஸ்லிம்)

(3) இறைவனுக்காக ஒன்றை செய்துமுடித்துவிட்டு பிறகு அதில் 'பெருமையைக்' கொண்டு வந்து பூசிவிடுவது. நல்லதொரு வீட் டைக் கட்டி அதில் நாறும் பன்றியைக் குடிவைத்தாற்போல. இது வும் சர்வ நாசம்தான்.

ரியா என்னும் இந்த பெருமை ஏன் உண்டாகின்றது?

(அ) ஒரு செயலை மற்றவர்கள் பார்வையில் படவேண்டும் என் பதற்காகவே செய்வது. அல்லாஹ்வுக்காக எப்படியெல்லாம் செயல் படுகின்றான் பார், என்று பிறர் போற்றுவதை எதிர்பார்ப்பது. இது *நிஃபாக்* - நயவஞ்சகம். *ஈமான்* என்னும் போர்வையிலுள்ள *நிஃபாக்.*

(ஆ) இறைவனுக்காக ஒன்றைச் செய்வது. மற்றவர்களின் கவ

னம் குவிந்ததும் அதனை இன்னும் அழகாக்கிக் கொள்வது. இவன் *தவ்பா* செய்து கொண்டால் ஒருவேளை இழந்ததைப் பெற வாய்ப்பிருக்கின்றது.

(இ) இறைவனுக்காகவே ஒன்றைச் செய்துமுடிப்பது. பிறகு மற்றவர்கள் அதனைப் புகழும்போது வாய்பேசாமல் மௌனமாக அங்கீகரிப்பது. இதுவும் கேடுகெட்ட ரியாவே ஆகும்.

ஃபுழைல் இப்னு இயாஸ் (ரஹ்) கூறுவதைக் கேளுங்கள்: 'மற்றவர்கள் பார்ப்பார்களே என்று ஒரு செயலை விடுவது ரியாவாகும். மற்றவர்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக ஒன்றைச் செய்வது ஷிர்க்காகும். இவற்றில் இருந்து இறைவன் உன்னைக் காப்பதற்குப் பெயர்தான் இக்ளாஸாகும்'.

இரண்டாவது நோய்

இறைவனுக்கும் நமக்கும் இடையே

பரிந்துரையாளர்களை நம்புவது

அரபுலக முஷ்ரிக்குகளிடம் இந்நோய் இருந்தது. அவர்கள் அல்லாஹ்வை நம்பினார்கள். அல்லாஹ்விடம் தங்களுக்காக வாதிட பல பரிந்துரையாளர்களையும் உருவாக்கி வைத்திருந்தார்கள். இன்றும் அவ்லியாக்கள், இறைநேரர்களை நாடிச் செல்வோர் இந்நம்பிக்கையில் தான் செல்கின்றார்கள். இது முற்றிலும் தவறு என்பதை பல இறைவசனங்கள் நிரூபிக்கின்றன.

மூன்றாவது நோய்

நிராகரிப்பாளர்களின் சமயநெறியை சரிகாண்பது, சந்தேகம் கொள்வது

இறைவனையும் இறைகட்டளைகளையும் ஒப்புக்கொள்ளாதவர்கள் தாம் முஷ்ரிக்கீன்களும் வேதக்காரர்களும். அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை என்பதை பகிரங்கப்படுத்த மறுப்பது.

தவ்ஹீத் என்பதில் இரு விஷயங்கள் அடங்கியுள்ளன.

(1) தாகூத்தை நிராகரிப்பது (2) இறைவனை நம்பியேற்பது.

லா இலாஹ இல்லல்லாஹ் - என்னும் இஸ்லாமிய தூயத் திருக் கலிமா எதிர்மறைச் சொற்றொடராகத்தான் உள்ளது. இல்லவே இல்லை எக்கடவுளும் - என்பது தாகூத்தை முற்றிலும் நிராகரிக் கின்றது. ஓரிறைவனைத் தவிர - என்பது ஒரேயிறைவனை முழு தாக நம்புகின்றது.

இனி, தாகூத்தை நிராகரித்து, அல்லாஹ்வை யார் நம்புகிறா ரோ அவர் மிகவும் பலமான கயிற்றைப் பிடித்துக் கொள்கிறார். அது அறுந்தேபோகாது. (அல்குர்ஆன் 2:256)

முஷ்ரிக்கீன்களையும் வேதக்காரர்களையும் காஃபிர்கள் எனச் சொல்லாமல் தயங்குபவனும் அவர்களும் நேர்வழியில்தாம் உள் ளார்கள் என்பவனும் அல்லாஹ்வையும் இறைவேதத்தையும் இறைத்தூதர் முஹம்மதையும் நிராகரித்தவனாவான்.

'முஸ்லிம்களின் வழிமுறையல்லாத இன்னொரு வழிமுறையைப் பின்பற்றுபவன், அவர்கள் விஷயத்தில் தயங்குபவன், அவர்களது நெறியை சரிகாண்பவன் போன்றோரை காஃபிர் என்கின்றோம் நாம். இஸ்லாமைத் தனது சமயநெறியாக அவன் வாதிட்டாலும் மற்ற சமயங்கள் அனைத்தும் சரியன்று என்பதைக் கொள்கையாக கொண்டிருப்பதாகக் கூறினாலும் சரியே' என்கிறார் காழி அயாஸ் (ரஹ்).

மத நல்லிணக்கம் பேசுவதும் எல்லா மதங்களும் இறைவனை நோக்கியே என சமத்துவ கீதம் இசைப்பதும் குஃப்ரு என்றே தாபிஈன்களும் ஸலஃபுஸ் ஸாலிஹீன்களும் கருதியுள்ளனர்.

உங்களுக்கு இப்ராஹீமிடத்திலும் அவருடைய தோழர்களிடத்தி லும் ஓர் அழகிய முன்மாதிரி இருக்கிறது. அதாவது, அவர்கள் தங் கள் சமூகத்தாரிடம் தெளிவாகக் கூறிவிட்டார்கள்: 'உங்களை விட் டும், இறைவனை விடுத்து நீங்கள் வணங்குகின்ற கடவுளரை விட் டும் நாங்கள் திண்ணமாக விலகி விட்டோம். நாங்கள் உங்களை நிராகரித்து விட்டோம். மேலும், உங்களுக்கும் எங்களுக்குமி டையே நிரந்தரப் பகைமையும், வெறுப்பும் ஏற்பட்டு விட்டன; ஏக அல்லாஹ்வின் மீது மட்டும் நீங்கள் நம்பிக்கை கொள்ளும் வரையில்!' (அல்குர்ஆன் 60:4)

இப்ராஹீமின் வழிமுறையை யார் புறந்தள்ளுவார்கள், மடையனைத் தவிர! (அல்குர்ஆன் 2:130)

'லா இலாஹ இல்லல்லாஹு என யார் சொன்னாரோ, இறைவனை விட்டு விட்டு வழிபடப்படுகின்ற அனைத்தையும் நிராகரித்தாரோ அவரது உயிரும் பொருளும் ஹறாமாகும். மற்றபடி அவர் விசாரணை என்னவோ அல்லாஹ்விடம் இருக்கின்றது' (முஸ்லிம்)

அல்லாஹ்வை நிராகரிக்கின்ற காஃபிர் என்றால்,

(1) பச்சைக் காஃபிராக இருப்பார். யூதனாக, கிறித்துவனாக அல்லது இந்துவாக!. அவரது நிராகரிப்பு தெள்ளத்தெளிவானது. இந்நிலையில் அவர் காஃபிர் அல்லர் என்பவர், அவரது சமய நெறியும் சரியானதுதான் என்பவர் - காஃபிராகி விடுகின்றார். இஸ்லாமை விட்டு வெளியேறி விடுகின்றார்.

(2) முஸ்லிமாக இருப்பார். தம்மை முஸ்லிம் என்றே சொல்லிக் கொள்வார். ஆனால் நிராகரிக்கும் செயல்களை செய்துவருவார். ஈமானை அரிக்கும் நோய்கள் அவரிடத்தில் காணப்படும். இந்நோய்கள் கடுமையானவையாக இருந்தால் - இறைத்தூதரை பரிகாசம் செய்வது, இறைத்தூதரைத் திட்டுவது போன்று - வெளியேறி விடுகின்றார்.

அதேசமயம் தொழுகையை விடுதல், நோன்பு வைக்காதிருத்தல், ஹஜ் செய்யாதிருத்தல் போன்றவையும் இதே தரத்திலானவை தாம் என்ற போதிலும் இவர்கள் விஷயத்தில் இமாம்கள் சற்று மென்மையான போக்கை கையாளுகின்றனர்.

நான்காவது நோய்

இறைத்தூதரை விட இன்னொருவரின் வழிகாட்டுதல், இறைத் தூதரின் கட்டளைகளை விட இன்னொருவரின் கட்டளைகள் சிறந்தவை என நம்புதல், இறைச்சட்டங்களை விட தாகூத்திய சட்டங்கள் மேலானவை எனக் கருதி அவற்றிடம் தீர்ப்பு நாடுதல்

இறைவனின் தூதர் என்றால் அவர் சொன்னது, பேசியது, உணர்த்

தியது அனைத்தும் இறைவனின் புறத்திலிருந்தே என்பதை நம்பி யாக வேண்டும்.

அஹ்மத் இப்னு ஸைத் இப்னு ஹாறூன் (ரஹ்) கூறுவதைக் கேளுங்கள், 'ஒரு தகவல் நமக்கு எப்படிக் கிடைக்கின்றது? ஒரு சான்றோர் இன்னொரு சான்றோரிடமிருந்து. சான்றோர் தாபிஈயிடமிருந்து, தாபிஈ நபித்தோழரிடமிருந்து. நபித்தோழர் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லமிடமிருந்து. இறைத்தூதர் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமிடமிருந்து. ஜிப்ரீல் அல்லாஹ்விடமிருந்து'. (அல் கிஃபாயஹ்)

'குர்ஆனைக் கொண்டு வந்ததைப் போன்று தான் ஸுன்னாவையும் ஜிப்ரீல் கொண்டு வந்தார்' என்கிறார் ஹஸ்ஸான் இப்னு அதிய்யா. (தாரமீ, அபூ தாவுது, கிஃபாயஹ், அப்துல் பர்ரின் ஜாமிஉ, மறூஸி)

ஆக, ஸுன்னாவை ஏற்காது நிராகரிப்பவன், ஒதுக்குபவன் குர்ஆனை ஒதுக்குபவனைப் போன்றவனே!.

'மிகச்சிறந்த கூற்று இறைமறை!. மிகச்சிறந்த வழிகாட்டுதல் இறைத் தூதரின் வழிகாட்டுதல்' (சஹீஹ் முஸ்லிம்)

வாழ்வியல் நெறிகளிலேயே உன்னதமானது எது? என அண்ணலாரிடம் கேட்கப்பட்டபோது கூறினார்கள், *'நேரிய நேர்த்தியான ஹனீஃபிய்யத்' (அஹ்மத்)*

இவ்வாறு சொல்லிக்கொண்டே போகலாம்.

முந்தைய சமயங்களில் ஒன்றையோ அல்லது மனிதர்கள் தாமாக வகுத்துக்கொண்ட சட்டதிட்டங்களையோ இறைத்தூதரின் வழிமுறையைக் காட்டிலும் சிறப்பானதாக ஒருவன் கருதுகின்றான் என்றால் ... தங்கள் உலக வாழ்க்கை அமைதியாகக் கழியவும் ஆதாயங்களைப் பெறவும் அதுவே உகந்தது என எண்ணுகின்றான் என்றால் ... உரிமைகளைப் பெற்றுத்தரவும் உலக இன்பங்களை அனுபவிக்கும் சலுகைகளை அளிக்கவும் அதுவே தகுந்தது என நம்புகின்றான் என்றால் ... - அறிஞர் பெருமக்கள் என்ன கூறுகிறார்கள், தெரியுமா? - அவன் மார்க்கத்தை விட்டு வெளியேறிவிட்டான்!.

அல்லாஹ் அருளியதைக் கொண்டு அவன் தீர்ப்பளிப்பவனாக

இருந்தாலும் சரியே!.

தனது வழிகாட்டுதலைக் கொண்டுதான் தீர்ப்பளித்தாக வேண்டும், தனது தூதரின் வழிமுறை ஒன்றையே பற்றிப்பிடிக்க வேண்டும் என இறைவன் கட்டளையிடுகிறான். அப்படியிருக்கும் போது அவற்றை விட சிறந்ததாக இன்னொன்றை கருதுபவன் காஃபிராக விடுவான் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமேயில்லையே?.

அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நம்பியேற்றுள்ளோம் என்றால் அவர்களது கட்டளைகளுக்கு முன்பு சிரம்பணிந்து குனிந்தாக வேண்டும்!. அவர்களது ஆணைகளுக்கு அடிபணிந்தாக வேண்டும்!. சமய நம்பிக்கைகளிலும் சொற்களிலும் செயல்களிலும் அவர்கள் சொன்னவற்றிற்கு கட்டுப்பட்டே தீரவேண்டும்!. நமக்கிடையே பிரச்சனைகள், பிணக்குகள், சச்சரவுகள் தோன்றும் போதும் அவர்களிடம் தான் மீளவேண்டும்!. ஏன், என்ன காரணம்? *'கட்டளையிடும் அதிகாரம் அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் கிடையாது' (அல்குர்ஆன் 6:57)*

உங்கள்மீது இறக்கப்படுவதையும் நம்புகின்றோம், அதற்கு முன்பு இறக்கப்பட்டதையும் நம்புகின்றோம் என வாதிடுவோரைப் பார்த்ததில்லையா? ஆனால் அவர்கள் தங்கள் பிரச்சனைகளை தாகூத்திடம் போய் தீர்த்துக் கொள்வதையே விரும்புகின்றார்கள். உண்மையில் தாகூத்தை நிராகரிக்கு மாறுதான் அவர்களுக்கு கட்டளையிடப்பட்டிருந்தது. வெகுதூரமான வழிகேட்டில் கொண்டு போய் அவர்களைத் தள்ளிவிட வேண்டும் என்றே ஷைத்தான் ஆசைப்படுகின்றான். (அல்குர்ஆன் 4:60)

நம்புகின்றோம் என *'வாதிடுகின்றார்கள்'*. ஏன் வாதிடவேண்டும்? அவர்களுடைய செயல்பாடுகள் வாயால் சொல்வதற்கு தகுந்தாற்போல இல்லை. எனவே ஈமான் இருக்கின்றது, ஈமான் இருக்கின்றது என்று அடிக்கடி 'சத்தியம்' செய்தாகவேண்டிய நிலை!.

இந்த இரண்டையும் ஒன்றுசேர்ப்பது சாத்தியமே இல்லை என்பதை அடுத்து இறைவன் தெளிவாக்கிவிடுகிறான்.

இல்லை, உங்கள் இறைவன் மீது சத்தியமாக, தங்களுக்கு இடையிலான பிரச்சனைகளில் உங்களையே நடுவராக ஆக்காத வரை, நீங்கள் அளிக்கும் தீர்ப்பை மாற்றுக்கருத்து கொள்ளாமல் மனம்

ஒப்பி ஏற்காதவரை அவர்கள் நம்பிக்கையாளர்களாக ஆகவே மாட் டார்கள்.(அல்குர்ஆன் 4:65)

ஆக, இறைவன் அருளியவற்றைக் கொண்டு மக்களிடையே தீர்ப்பு வழங்குவதுதான் 'ஈமான்!'. இறைவனை அதுவே நெருங்கச் செய்யும்!. தீனும் வழிபாடும் அதுதான், மக்களுக்கு நன்மை யிருப்பதும் அதில்தான்!.

இறைவன் அருளியவற்றை செயற்படுத்தும் சூழ்நிலை இல்லை எனில் அதனை உருவாக்குவதுதான் உம்மத்தே முஹம்மதியாவின் பொறுப்பும் பணியும். அதற்குத்தானே அவர்கள் தோற்றுவிக்கப் பட்டுள்ளார்கள்!.

ஐந்தாவது நோய்

இறைத்தூதரின் வழிமுறை எதனையாவது வெறுப்பதும் நிராகரிப்பதும்

இறைத்தூதரின் வழிகாட்டுதல்களில் ஏதேனும் ஒன்றை வெறுப் பது, விரோதமாக பார்ப்பது, அங்கீகரித்து ஏற்க முன்வராதிருப்பது, நடைமுறைப் படுத்த நிராகரிப்பது - இவை யாவும் குஃப்ராகும். முனாஃபிக்கீன்களிடம் இருப்பதும் நரகத்தின் அடித்தட்டில் கொண்டுபோய்ச் சேர்ப்பதும் இப்பண்புதான்!.

இறைக் கோட்பாடு, சமய நெறி, ஷரீஅத், வாழ்வியல் வழிகாட்டு தல் என வாழ்க்கை தொடர்பான யாவற்றைப் பற்றியும் ஏவல்களும் விலக்கல்களுமாக இறைத்தூதரின் வழிமுறை தெளிவாக உள்ளது. இவற்றில் எதையாவது ஒன்றை அலட்சியப்படுத்துவது, காலத் துக்கு உதவாது எனப் புறந்தள்ளுவது!.

இன்று மக்களாட்சிக் கோட்பாட்டில் கரைந்து போனோர் உலகம் எங்கும் இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றார்கள். மேலை நாட் டினர் ஒரு பண்பாட்டையும் அரசியல் அமைப்பையும் உருவாக்கி உலகமெங்கும் இன்று பரப்பி வைத்திருக்கின்றார்கள். திருட்டுக்குத் தண்டனை கரங்களை வெட்டுவதா? பாலியல் வல்லுறவுக்கு ஆளைக் கொள்வதா? மது அருந்தினால் கசையால் அடிப்பீர்களா?

திட்டமிட்டுக் கொன்றால் அவனையும் கொன்றுவிடுவீர்களா? பெண்ணுக்கான நஷ்டஈடு ஆணுக்கானதில் பாதியா? - இவை எல்லாம் காட்டுமிராண்டித்தனமான சட்டங்களாக அல்லவா இருக் கின்றன!. இன்று இந்தச் சிந்தனை ஊரெல்லாம் உலகமெல்லாம் பரவிக் கிடக்கின்றது. நம்முடைய மூளையிலும் தக்கதோர் இடத்தை அது பிடித்தே விட்டது.

ஆமாம் தானே! இவையாவும் சரிதானே! என்று உள்ளத்தின் ஓர மாய் மெதுவாக யாருக்கும் தெரியாமல் நாமும் *'நினைக்கின் றோம்'*. சில தைரியசாலிகள் இருக்கின்றார்கள். வெளிப்படையா கவே இவற்றைப் பேசி விடுகின்றார்கள். அல்லாஹ் அருளியதற்கு எதிராக துணிந்து பேசுமளவுக்கு *'தைரியம்'*.

இறைவன் அருளிய மார்க்கத்தில் ஒரே ஒரு சின்ன விஷயத்தை - அது பலதார மணமாகக் கூட இருக்கலாம் - தவறு என்றொருவன் எண்ணினால் அவன் இறைமார்க்கத்தை விட்டு வெளியேறி விடு கின்றான்.

யார் நிராகரித்தார்களோ, அவர்களுக்கு அழிவுதான்! மேலும், அல்லாஹ் அவர்களுடைய செயல்களைப் பயனற்றதாக்கிவிட்டி ருக்கிறான். அதற்குக் காரணம், அல்லாஹ் இறக்கிவைத்ததை அவர் கள் வெறுத்தார்கள். எனவே, அல்லாஹ் அவர்களின் செயல்களை வீணாக்கிவிட்டான். (அல்குர்ஆன் 47:8,9)

பார்த்தீர்களா? *'அல்லாஹ் அருளியதை வெறுத்த காரணத்தால்'* ஆகிவிட்டார்கள் *'காஃபிர்கள்'*. அதுமட்டுமல்ல, அவர்களது செயல் கள் அனைத்தும் வீணாகிவிட்டன. இன்றோ முஸ்லிம்களாக தங் களை இனம் காட்டிக் கொள்கின்ற பலர், இறைவன் அருளியதை யும் இறைத்தூதரின் வழிமுறைகளையும் மனதால் எண்ணும்போதே முகம் சுளிக்கின்றார்கள்.

இது ஈமானை அரிக்காதா? அரித்துத் துளைக்காதா? பொல பொலவென உதிர வைத்துவிடாதா?

ஷரீஅத் தடைசெய்துள்ள குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை காஃபிர்கள் என- ஷரீஅத்தே அவர்களை அவ்வாறு கருதாத போது- சொல்ல மாட்டோம். குற்றம் என ஷரீஅத் வரையறுத்துள்ளது தவறு என விமர்சிப்போரைப் பற்றியே பேசுகின்றோம்.

ஒரு விஷயம் நமக்குப் பிடிக்காதிருக்கலாம். ஆனால் இறை கட்டளை என்றால் கீழ்ப்படிந்தே தீரவேண்டும். போரிட்டு மாய்வதை பலரும் வெறுப்பர்.

'போர் செய்யுமாறு உங்களுக்குக் கட்டளையிடப்பட்டிருக்கின்றது; ஆனால் அதுவோ உங்களுக்கு வெறுப்பாயிருக்கிறது'. (அல் குர்ஆன் 2:216)

தனது கணவர் இன்னொரு பெண்ணை மணமுடிப்பமை எந்தப் பெண் விரும்புவாள்? அவ்வளவு ஏன், கடுங்குளிர் காலத்தில் உறைக்கும் தண்ணீரில் ஒழு செய்வது நமக்குப் பிடித்தமான செயலா, என்ன?

விருப்புக்குரிய விஷயங்களில் அனைவரும் கீழ்ப்படியவே செய்வர். வெறுப்புக்குரியவற்றில் கீழ்ப்படிய வேண்டும். அதுதான் இதாஅத்!, அதுதான் கட்டுப்பாடு!.

ஆறாவது நோய்

இறைத்தூதரின் மார்க்கத்தில்

ஏதேனும் ஒன்றை எள்ளி நகையாடுவது

(நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று) அவர்களிடம் நீர் கேட்பீராயின் உடனே அவர்கள் கூறுவர்: ''நாங்கள் நகைச்சுவையாகவும் விளையாட்டாகவும்தான் பேசிக்கொண்டிருந்தோம்''. அவர்களிடம் நீர் கூறும்: 'அல்லாஹ்வையும் அவனுடைய வசனங்களையும் அவனுடைய தூதரையும்தான் நீங்கள் பரிகாசம் செய்து கொண்டிருக்க வேண்டுமா? உங்கள் தவறுகளை நீங்கள் நியாயப்படுத்த வேண்டாம். நீங்கள் இறை நம்பிக்கை கொண்டபின் திண்ணமாக நிராகரித்துவிட்டீர்கள். உங்களில் ஒரு கூட்டத்தாரை நாம் மன்னித்துவிட்டாலும் மற்றொரு கூட்டத்தாருக்கு நாம் தண்டனை வழங்கியே தீருவோம்! ஏனெனில், அவர்கள் குற்றவாளிகளாகி விட்டனர்'. (9:65, 66)

அல்லாஹ்வின் வேதவசனங்களை கேலியும் கிண்டலும் செய்வோருக்கு கடும் வேதனை இருக்கின்றது என்கின்றது குர்ஆன்!.

அல்லாஹ்வை, வானவர்களில் ஒருவரை, இறைத்தூதர்களில் ஒருவரை, குர்ஆனில் ஒரு வசனத்தை, மார்க்கக் கடமைகளுள் ஒன்றை ஒருவன் பரிகாசம் செய்கின்றான் என்றால் அவன் காஃபிர் ஆகிவிட்டான் என்பது ஊர்ஜிதமாகிவிடுகின்றது - *இமாம் இப்னு ஹஸ்ம் (ரஹ்).*

இறைவனும் இறைத்தூதரும் ஏதேனுமொரு விஷயத்தில் கட்டளை இட்டுவிட்டால் அதில் மாற்றுக் கருத்து கொள்ளக்கூட நம்பிக்கை கொண்ட ஆணுக்கோ பெண்ணுக்கோ அனுமதி இல்லை என்கின்றது வான்மறை!. (அல்குர்ஆன் 33:36)

அப்படியிருக்கையில் கிண்டலடிப்பவனின் நிலையை என்னவென்று சொல்வது? *முர்தத்* ஆகி மார்க்கத்தை விட்டே அவன் வெளியேறிவிடுகின்றானே!.

தபூக் போரின்போது ஓர் அவையில் 'நமது காரிகள் ஏனிவ்வாறு ஓதக் கூடாது? *வயிற்றால் பெருத்தோர், வார்த்தைகளால் பொய்யோர், புறமுதுகிடும் பண்போர்'* என்றான் ஒருவன். 'அடேய், நீயோரு முனாஃபிக்' என்றவாறு அங்கிருந்த ஒருவர் உடனே இதைப் பற்றி அண்ணலாரிடம் தெரிவித்தார். அண்ணலார் கூப்பிட்டு விசாரிக்கையில் 'இல்லை, அல்லாஹ்வின் தூதரே, நாங்கள் சும்மா விளையாட்டிற்கு அவ்வாறு பேசிக் கொண்டிருந்தோம்' என்றான் அப்பெருமகன். அப்போதுதான் மேற்கண்ட இறைவசனம் அருளப் பட்டது.

அல்லாஹ்வையோ அவனருளிய வசனங்களையே இறைத்தூதரையோ அவர் கொணர்ந்த வழிமுறைகளையோ ஏளனமாகக் கருதுபவன் இறை மார்க்கத்தை விட்டு வெளியேறி விடுகின்றான். 'அந்நோக்கில்' தான் அவ்வாறு உரைக்கவில்லை என அவன் சத்தியமிட்டாலும் தொழுது, நோன்பு நோற்றாலும் அவன் *முர்தத்* என்கின்றது வான்மறை. (காண்க 83:29-33)

கேலி கிண்டலின் இரு வகைகள்

(1) பகிரங்கமாக கிண்டலடிப்பது. மேலே கண்ட தபூக் போர் நிகழ்வைப் போல. இது காலங்கடந்த மார்க்கம், நாடோடிகளாக வாழ்ந்து திரிந்த அரபுக்களை நல்வழிப்படுத்த வந்த மார்க்கம் என்பது.

(2) வாய்வார்த்தைகளால் உடல்மொழியால் இறைமார்க்கத்தை கேலியாக விமர்சிப்பது. குர்ஆன் ஓதக் கேட்கும்போதோ இறைத் தூதரின் ஸுன்னாவை செவியுறும்போதோ இறைத்தூதரின் வழி முறை ஒன்றை செயற்படுத்த முனைவதைக் காணும் போதோ ஏதா வதொரு வகையில் பரிகாசம் செய்வது, ஏளனப் பார்வையை வீசு வது.

மேலும் அல்லாஹ்வின் வசனங்கள் நிராகரிக்கப்படுவதை அல் லது அவை பரிகாசம் செய்யப்படுவதை நீங்கள் கேட்க நேர்ந்தால் அவர்களோடு சேர்ந்து அமராதீர்கள் அவர்கள் வேறுபேச்சில் கவ னம் செலுத்தும்வரை என இவ்வேதத்தில் அவன் உங்களுக்கு வழி காட்டியிருக்கிறான். இல்லையென் றால் நீங்களும் அவர்களைப் போன்றே ஆகிவிடுவீர்கள்! (அல் குர்ஆன் 4:140)

அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்து அவற்றைக் கேலிக்குட் படுத்தும் சபைகளுக்குப் போகாதீர்கள்; அவர்கள் வேறு பேச்சு களை எடுக்கும்வரைசேர்ந்து உட்காராதீர்கள் என தெளிவாகக் குர் ஆன் கட்டளையிடுகின்றது. அதைமீறி ஒருவன் இதை செய்கின் றான் என்றால் அவனும் அவர்களைச் சேர்ந்தவனே!. எனவேதான் இந்த முனாஃபிக்கீன்களுக்கும் காஃபிர்களோடு சேர்த்து நரகத்தில் இடம் ஒதுக்கியுள்ளான், இறைவன்!.

இறைவனின் மார்க்கமும் இறைவனின் ஷரீஅத்தும் கிண்டலடிக் கப்படும் சபைகளுக்கு ஒரு முஸ்லிம் போகின்றான் என்றால் அவன் ரோஷங்கெட்டவன், சூடு சுரணை அற்றவன் என்றே பொருள்!. அது போன்ற சபைகளுக்குப் போவதை ஒருவன் பெருமையாகக் கருது கின்றான் என்றால் அதை என்னவென்று சொல்வது? ரோஷங் கெட்டவன் என்பதைவிட அவனை விட்டு ஈமான் நீங்கியேவிட்டது என்றுதான் சொல்லியாகவேண்டும்.

இறைத்தூதரை திட்டுவதும் இதில் அடங்கும். 'இறைத்தூதரைத் திட்டினாலோ குறைகண்டாலோ தன் புறத்திலிருந்து ஒரு குற்றத் தைக் கண்டுபிடித்தாலோ அண்ணலாரின் வம்சாவழியை மட்டந் தட்டினாலோ மார்க்கத்தை இழிவாயுரைத்தாலோ பண்புகளில் ஒன்றை கீழ்த்தரமாகக் கருதினாலோ இல்லாத ஒன்றை இட்டுக் கட்டினாலோ வசைக்கு ஒப்பான ஒன்றை ஏற்றிக்கட்டினாலோ அண்ணலாரின் மாண்பினைக் குறைக்க முயன்றாலோ குறை

யையோ கறையையோ அண்ணலாரோடு இணைத்துப் பார்க்கும் அளவுக்கு நடந்துகொண்டாலோ - அவன் இறைத்தூதரைத் திட்டிய வனே. அதற்குரிய தண்டனையே இவனுக்கும்'.

- ஒட்டுமொத்த உம்மத்தின் *இஜ்மாஉ* இது என்கிறார் *காழி அயாஸ் (ரஹ்).*

மனதின் கோழைத்தனத்தால் இறைத்தூதரை குறைவாக எடை போடுவதும் கஞ்சத்தனத்தால் வெறுத்து உரைப்பதும் அறியாமை யால் தரக்குறைவாகக் கருதுவதும் கூட இதில் அடங்கவே செய்யும்.

இறைத்தூதரை மட்டுமல்ல, இறைமார்க்க அறிவு பெற்றோரை கிண்டல் கேலி செய்வதும் கீழ்த்தரமாகக் கருதுவதும் கூட ஈமானை அரித்துவிடும் என்கின்றனர் அறிஞர் பெருமக்கள்.

ஏழாவது நோய்

செய்வினை, சூனியம்

எட்டாவது நோய்

முஷ்ரிக்குகளோடு கைகோர்ப்பது, முஸ்லிம்களுக்கு எதிராக உதவுவது

உங்களில் எவரேனும் அவர்களைத் தம் உற்ற நண்பர்களாய் ஆக் கிக் கொண்டால், அவரும் அவர்களைச் சார்ந்தவராகவே கணிக்கப் படுவார். திண்ணமாக, அல்லாஹ் அக்கிரமக்காரர்களுக்கு நேர்வழி காட்டுவதில்லை. (அல்குர்ஆன் 5:51)

இன்று அவர்களில் பெரும்பாலோர் (இறைநம்பிக்கையாளர் களுக்கு எதிராக) நிராகரிப்பாளர்களுக்கு ஆதரவாளர்களாயும், உற்ற நண்பர்களாயுமிருப்பதை நீர் காண்கிறீர். சந்தேகமின்றி அவர் கள் தமக்காக சம்பாதித்தவை எத்துணை தரங்கெட்டவை! இதனா லேயே அல்லாஹ் அவர்கள் மீது கோபங் கொண்டான். மேலும் நிரந்தரமான வேதனைக்கு அவர்கள் பலியாவார்கள். உண்மையி லேயே அவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறைத்தூதரின் மீதும்

அவருக்கு இறக்கி அருளப்பட்ட வேதத்தின் மீதும் நம்பிக்கை கொண்டிருப்பார்களாயின் (நம்பிக்கையாளர்களுக்கு எதிராக) நிரா கரிப்போரை தம் உற்ற நண்பர்களாய் ஒருபோதும் ஆக்கிக் கொண் டிருக்க மாட்டார்கள். ஆயினும் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிவதிலிருந்து விலகிச் சென்றுவிட்டனர். (அல்குர்ஆன் 5:80, 81)

இது, முனாஃபிக்கீன்களின் பண்பன்றோ?

'பயங்கரமான வேதனை இருக்கின்றது என நல்வாழ்த்து சொல்லி விடுங்கள் முனாஃபக்கீன்களுக்கு! முஸ்லிம்களை விட்டுவிட்டு காஃபிர்களோடு நட்பு பாராட்டினார்களே அவர்களுக்கு! அவர்களி டமா கண்ணியத்தை எதிர்பார்க்கின்றார்கள்? ஒட்டுமொத்த கண்ணி யமும் அல்லாஹ்விற்கு அல்லவா உரி யது? (அல்குர்ஆன் 4ஃ138, 139)

முஸ்லிம்களின் எதிரிகளோடு வெளிப்படையாகவும் ரகசியமாக வும் உறவு கொண்டு உதவுவதாக வாக்களித்திருந்தால் - அளிக் கின்ற வாக்கு பொய்யான வாக்கோ மெய்யான வாக்கோ இரண்டும் ஒன்றுதான்.

நயவஞ்சகத்தனமான நடத்தையை மேற்கொண்டிருப்பவர்களை நீர் பார்க்கவில்லையா, என்ன? இவர்கள் வேதம் வழங்கப்பட்டவர் களில் இறை நிராகரிப்பாளர்களாய் உள்ள தங்களின் சகோதரர்களி டம் கூறுகின்றார்கள்: ''நீங்கள் வெளியேற்றப்பட்டால் நாங்களும் உங்களுடன் வெளியேறிவிடுவோம். உங்கள் விவகாரத்தில் நாங் கள் எவருடைய பேச்சையும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட் டோம். உங்களின்மீது போர் தொடுக்கப்பட்டால் நாங்கள் உங்க ளுக்கு நிச்சயம் உதவி செய்வோம்!'' ஆனால், இவர்கள் சுத்தப் பொய்யர்கள் என்பதற்கு இறைவன் சாட்சியாக இருக்கிறான். (அல் குர்ஆன் 59:11)

உதவுவதற்கு என்னென்னவோ காரணங்கள் இருக்கத்தான் செய் கின்றன? உலக வாழ்க்கையின் உரிமைகளை ஈட்டுதல், எதிரிகளின் மீதான பயம், மத நல்லிணக்கம், சுமூகப் போக்கு, ஏதேனும் துன்பங் கள் சமுதாயத்தை துளைத்து விடுமோ என்னும் அச்சம், உயிர்களை யும் உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ளும் வியூகம் - எனப்

பல காரணங்கள்.

எவருடைய உள்ளங்களில் நயவஞ்சகப் பிணி உள்ளதோ அத் தகையோர் அவர்களிடையிலேயே முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நீர் காண்கின்றீர். ''ஏதேனுமொரு துன்பம் எங் களைப் படித்து விடுமோ என்று நாங்கள் அஞ்சுகின்றோம்'' என் கின்றார்கள் அவர்கள். (அல்குர்ஆன் 5:52)

இதற்குக் காரணம், இவர்கள் மறுமையைவிட உலக வாழ்க் கையை அதிகம் நேசித்ததுதான். மேலும் (அல்லாஹ்வின் நியதி என்னவெனில்) நன்றி கொல்லும் மக்களுக்குத் திண்ணமாக அல்லாஹ் நேர்வழி காட்டுவதில்லை. (அல்குர்ஆன் 16:107)

நிராகரிப்பாளர்களை உற்ற தோழர்களாக ஆக்கிக்கொள்ளக் கூடாது என்பது பொதுவான கட்டளையாகும். உறவினர்களாக உடன்பிறப்புகளாக கொண்டோர் கொடுத்தோராக எப்படி வேண்டு மானாலும் அவர்கள் இருக்கலாம்.

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன் வேதம் அருளப்பட்டவர்களில் எவர்கள் உங்களுடைய தீனை (நெறியை) கேலிக்கும் விளையாட்டுக்கும் உரித்தாக்கிக் கொண்டார்களோ அவர்களையும், மற்ற நிராகரிப்பாளர்களையும் உங்களின் உற்ற நண்பர்களாய் நீங்கள் எடுத்துக் கொள்ளாதீர்கள்! நீங்கள் இறை நம்பிக்கையாளர்களாய் இருந்தால் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (அல்குர்ஆன் 5:57)

அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை வைத் திருக்கும் மக்கள், அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் எதிர்ப்பவர்கள் மீது அன்பு செலுத்துவதை (நபியே!) நீர் காண மாட்டீர்! அத்தகையோர் அவர்களுடைய தந்தையராயினும் அல் லது அவர்களுடைய தனயர்களாயினும் அல்லது அவர்களுடைய சகோதரர்களாயினும் அல்லது அவர்களுடைய குடும்பத்தினரா யினும் சரியே! அவர்களின் இதயங்களில் அல்லாஹ் ஈமானை நம்பிக்கையைப் பதித்து வைத்துவிட்டான். (58:22)

இக்கட்டளையை மீறும்போது நமக்கெதிராக எந்தவொரு நட வடிக்கையையும் மேற்கொள்ளும் உரிமையை நாம் அல்லாஹ் விற்கு கொடுத்துவிடுகின்றோம். அதன்பின் வருத்தப்பட்டோ

அழுது புலம்பியோ எந்தப் பயனுமில்லை!.

நம்பிக்கையாளர்களே, முஸ்லிம்களுக்கு எதிராக காஃபிர்களை உங்கள் நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள்!. உங்களுக்கு எதிரான ஆதாரத்தை நீங்களே அல்லாஹ்விடம் ஒப்படைத்து விட நினைக் கின்றீர்களா? (அல்குர்ஆன் 4:144)

முஃமின்களைத் தவிர காஃபிர்களை நம்பிக்கையாளர்கள் தம் தோழர்களாக ஆக்கக்கூடாது. இப்படிச் செய்வோரோடு அல்லாஹ் விற்கு எத்தொடர்பும் கிடையாது. எனினும் எப்படி இதிலிருந்து விலகிவிடவேண்டுமோ அப்படி நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். தன்னைப்பற்றி சொல்லி அல்லாஹ் உங்களை பயமுறுத்துகிறான். மேலும் அவனிடம்தான் நீங்கள் திரும்பப் போயாக வேண்டும். (அல்குர்ஆன் 3:28)

அல்லாஹு அக்பர்! எத்துனை வசனங்கள்! இன்னும் உள்ளன. ஈமானை செல்லரித்து இல்லாமலொழித்து இறைவனின் வெறுப்பை யும் தண்டனையையும் பெற்றுத்தருகின்ற கேடு கெட்ட செயல் இத்தோழமை!.

'முஸ்லிம்களைத் தவிர்த்து' -அப்படியாயின் *'முஸ்லிம்களைத் தவிர்த்துவிட்டு, முஸ்லிம்களுக்கு எதிராக, முஸ்லிம்களின் நலன் களுக்கும் நன்மைகளுக்கும் எதிரான விதத்தில்'* காஃபிர்களோடு நட்புறவு கொள்ளக் கூடாது.

இஸ்லாமிய நலனும் முஸ்லிம்களின் நலனும் மற்றெல்லா நலன் களை விட மற்றெல்லா உரிமைகளை விட முன்னிலையில் இருந் தாகவேண்டும். அப்படி இருக்கையில் இஸ்லாம் மற்றும் முஸ்லிம் களின் நலன்களுக்கு எதிராக காஃபிர்களின் எந்த சமூகத்தோடும் ஒட்டுறவு வைத்துக் கொள்வது எந்த முஸ்லிம் ஜமாஅத்திற்கும் தகாது!

இந்தக் கட்டுப்பாடு நமக்கு ஒரு விஷயத்தை விளக்குகின்றது. போரில்லா காலங்களில் காஃபிர்களோடு நட்புறவு வைத்துக் கொள் ளும் நன்னடத்தைக்கு நேர்மையான போக்கிற்கு பெருந்தன்மைக்கு ஒரு தடையும் இல்லை! அப்படிப்பட்ட உறவைப் பேணுங்கள் என்றுதான் மானுட குலத்திற்கு இஸ்லாம் போதிக்கின்றது. ஒரு முஸ் லிம் சமூகம் முஸ்லிமல்லாத மற்ற சமூகங்களோடு அரசியல்

தொடர்பு, தோழமை, பொருளா தார பரிவர்த்தனை போன்ற தளங்களில் உறவாட தடையில்லை.

ஒன்பதாவது நோய்

ஷரீஅத்திற்கு அப்பாற்பட்டவர்களாக சிலரைக் கருதுவது

கிழ்று அலைஹிஸ் ஸலாம் எப்படி இறைத்தூதர் மூஸா அலைஹிஸ் ஸலாமுடைய ஷரீஅத்திற்கு அப்பாற்பட்டவரோ அதே போன்று இவர்களும் ஷரீஅத்தே முஹம்மதியாவிற்கு அப்பாற்பட்டவர்கள் என சிலரைப் பற்றி கருதுவது - ஈமானை அரிக்கும் நோய்களுள் ஒன்றாம். ஏறக்குறைய மூன்றாவது நோயோடு ஒத்தது, இது.

மேலும், (நபியே!) நாம் உங்களை மனிதகுலம் முழுவதற்கும் நற்செய்தி அறிவிப்பவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் தான் அனுப்பிவைத்திருக்கிறோம். (அல்குர்ஆன் 34:28)

''மனிதர்களே! திண்ணமாக, வானங்கள் மற்றும் பூமியின் அதிபதியாகிய அல்லாஹ்வின் தூதராக நான் உங்கள் அனைவர் பாலும் அனுப்பப்பட்டுள்ளேன்''. (அல்குர்ஆன் 7:158)

பெரும்பாக்கியம் நிறைந்தவனாக இருக்கிறான், தன்னுடைய அடியார் மீது (சத்தியத்தையும், அசத்தியத்தையும் பிரித்துக் காட்டும்) இந்த ஃபுர்கானை (அதாவது குர்ஆனை) இறக்கி வைத்தவன். அகிலத்தார் அனைவருக்கும் (அவர்) எச்சரிக்கை செய்யக் கூடியவராக திகழ வேண்டும் என்பதற்காக! (அல்குர்ஆன் 25:1)

திண்ணமாக, இஸ்லாம் மட்டுமே அல்லாஹ்விடம் (ஒப்புக் கொள்ளப்பட்ட) வாழ்க்கை நெறி (தீன்) ஆகும். (குர்ஆன் 3:19)

இஸ்லாம்தான் அல்லாஹ்வின் மார்க்கம்! பிரபஞ்சத்திலுள்ள அனைத்துப் பொருட்களின் மார்க்கமும் அதுதான்! இப்பிரபஞ்சத்தில் உள்ள எந்தப் பொருளாயினும் விரும்பியோ வேறுவழியின்றோ அல்லாஹ்விற்குத்தான் முழுமையாக அடிபணிகிறது.

இவ்வாறு அவனுக்குப் பணிந்து வாழும் நடத்தையை (இஸ்லாமை) விடுத்து வேறொரு வாழ்க்கை நெறியை யாரேனும்

மேற்கொள்ள விரும்பினால், அவனிடமிருந்து ஒருபோதும் அது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. (அல்குர்ஆன் 3:85)

மற்றெல்லா இறைத்தூதர்களை விட தமக்கு 6 சிறப்புகள் வழங்கப் பட்டுள்ளதாக அண்ணலார் தெரிவிக்கிறார்கள். (1) இரத்தினச் சுருக்கமாக பேசும் அருட்கொடை (2) பகைவர் உள்ளத்தில் கடும் பயம் (3) கால்நடைகள் அனைத்தும் ஹலால் (4) நிலப் பகுதி முழுக்க தூய்மையாகவும் தொழும் இடமாகவும் (5) உலக மக்கள் அனைவருக்குமான தூதர் (6) இறுதிநபித்துவம் (முஸ்லிம்)

'முஹம்மதுவின் உயிரைக் கைப்பற்றியிருப்போன் மீது சத்தியமாக, இந்த உம்மத்தைச் சேர்ந்த எந்த யூதனாயினும் கிறித்துவனாயினும் எனக்கு அருளப் பட்டவற்றின் மீது ஈமான் கொள்ளாத நிலையில் செத்துப்போய்விட்டால் நரகவாசிகளில் ஒருவனாகத்தான் இருப்பான்' என அண்ணலார் தெளிவுபடுத்தியுள்ளார்கள். (சஹீஹ் முஸ்லிம்)

ஒருமுறை அண்ணலாருக்கு முன்பாக தவ்ராத் வேதத்தின் பிரதி ஒன்றை உமர் ஓதியபோது கடும் சினமடைந்தார்கள் அண்ணலார்.

'தூய்மையான ஒளிவீசும் வழிகாட்டுதலை நான் கொண்டு வந்துள்ளேன். ஆகையால் வேறெங்கும் எதனையும் தேடாதீர்கள். மூஸா இன்று இருந்தாலும் எனது வழிகாட்டலையே பின்பற்றியாக வேண்டும்' என எச்சரித்தார்கள். (அஹ்மத்)

தெளிவான வழிகாட்டுதல் இவ்வாறிருக்க இந்த ஷரீஅத்தைப் பின்பற்ற வேண்டிய தேவை இல்லை என சிலரைப் பற்றி கருதுவதும் நம்புவதும் அறிவுக்கு ஒவ்வாததாகும். வழிகேட்டுக்கு வழிவகுப்பதாகும்.

பத்தாவது நோய்

இறைமார்க்கத்திற்கு எதிரான ஆட்சேபணை

இறைவனின் நேர்வழிக்கு எதிரான ஆட்சேபணை இருவழிகளில் வெளிப்படலாம். (1) தீனின் மீதுள்ள அலட்சியத்தால் அதனைக் கற்காமல் இருப்பது (2) தீனைப் பின்பற்றுவதில் அலட்சியம் காட்டுவது.

மேலும், தன்னுடைய இறைவனின் வசனங்கள் வாயிலாக அறிவுரை வழங்கப்பட்ட பிறகும் அதனைப் புறக்கணித்துவிட்டவனை விடக் கொடிய அக்கிரமக்காரன் யார்? இத்தகைய குற்றவாளிகளை நாம் பழிவாங்கியே தீருவோம்! (32:22)

யூதனோ கிறித்துவனோ இம்மார்க்கத்தை பின்பற்றியே ஆக வேண்டும் என்பதை சற்றுமுன் கண்டோம். அதன்படி, பின்பற்ற மாட்டேன் என்பதை செயல் வடிவத்தில் காட்டுபவன் தீனை விட்டு வெளியேறி விடுகின்றான்.

சொல்லிவிடுக: அல்லாஹ்விற்கு கீழ்ப்படியுங்கள், தூதருக்கு கட்டுப்படுங்கள். அஃதன்றி, முகத்தைத் திருப்பிக்கொண்டால் காஃபிர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 3:32)

'அல்லாஹ்வின் மீதும் தூதர் மீதும் நாங்கள் நம்பிக்கை கொண்டோம்; மேலும், கீழ்ப்படிதலை ஏற்றுக் கொண்டோம்' என்று இவர்கள் கூறுகின்றார்கள். ஆயினும் இதன் பின்னர், இவர்களில் ஒரு பிரிவினர் (கீழ்ப்படியாமல்) புறக்கணித்து விடுகின்றார்கள். இத்தகையோர் எவ்வகையிலும் நம்பிக்கையாளர்கள் அல்லர். (அல்குர்ஆன் 24:47)

அல்லாஹ்வின் மார்க்கத்தை இவர்கள் சட்டையே செய்யமாட்டார்கள். என்னென்ன கட்டளைகளை பின்பற்றாமல் அலட்சியமாக தாம் விடுகின்றோம் என்பதைப் பற்றியோ என்னென்ன தடைகளை சர்வ சுதந்திரமாக செய்துவருகின்றோம் என்பதைப் பற்றியோ இவர்களுக்கு உணர்வோ கவலையோ இருக்காது.

ஷஹாதத் கலிமாவில் அடங்கியுள்ள இரண்டு அம்சங்களை இவர்கள் மனதளவில் ஒப்புக் கொண்டிருக்கவும் மாட்டார்கள், செயலளவில் வெளிப் படுத்தவும் மாட்டார்கள்.

'இறைவனும் அவன் தூதரும் நெறிமுறைப்படுத்தியுள்ளவற்றுள் ஒன்றை விட்டுவிட்டால் கூட தன்னை 'நம்பிக்கையாளன் - முஃமின்' என்று சொல்லும் தகுதியை ஒருவன் இழந்துவிடுகின்றான்' என்கிறார் இமாம் இப்னு தைமிய்யா (ரஹ்).

வஹீ வெளிப்பாடாய் வந்துதித்த எந்தவொரு வழிகாட்டலுக்கு எதிராகவும் ஆட்சேபணையை வெளிப்படுத்துபவன் நாளை

மறுமை நாளில் *'அந்தோ! எனக்கும் உனக்குமிடையே கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையிலான இடைவெளி இருந்திருக்க வேண்டுமே! நீயோ மிக மோசமான நண்பனாய் இருந்திருக்கின்றாய்' (அல்குர் ஆன் 43:38)* என்று சொல்லியே தீருவான் - என்கிறார் இமாம் இப்னுல் கய்யிம் (ரஹ்).